# ஞானச் செல்வர்

வெளியீடு :

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு
நல்லூர், யாழ்ப்பாணம்.
2013-04-06

# ஞானச் செல்வர்

## – கைந்நூல் –


**ஆசிரியர் குழு :**

**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M.A., PhD**
(முதுநிலை விரிவுரையாளர், சப்ரகமுவ பல்கலைக்கழகம்)

**S.Y. ஸ்ரீதர், B.A. (Hons) , M.Phil**
(சிரேஷ்ட விரிவுரையாளர், சப்ரகமுவ பல்கலைக்கழகம்)

**பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன், M.A.**
(வருகை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)



வெளியீடு :

**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
**2013-04-06**

## வாழ்த்துச் செய்தி

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழாவின்போது கௌரவம் பெறும் சான்றோர்கள் பற்றிய விபரங்களடங்கிய இக் கைநூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக மகிழ்வடைகின்றேன். சைவத்தையும் தமிழையும் தன்னுயிராக மதித்துவரும் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களைப் போன்று செயற்பட்டுவரும் இருபத்து நான்கு சான்றோர்கள் கௌரவம் பெறுகின்றார்கள். ஒருவர் வாழும் போதே அவரது பணிகளின் சிறப்பைப் போற்றுவதும் வாழ்த்துவதும் மிகவும் உன்னதமாகும்.

பல்துறைசார் சான்றோர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு விருது வழங்கி பாராட்டும் நிகழ்வு இன்றைய விழாவுக்குப் பொருத்தமானதும் உயர்வைத் தருவதுமாகும். நான் மணிவிழாவைத் தலைமையேற்று நடத்தும்போது சான்றோர் விருது பெறுவது மிகுந்த மகிழ்வைத் தருகின்றது.

இச் சான்றோர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் பொதுப் பணிகளுக்கும் மேலும் நிறைந்த பங்குபற்றுதலைச் செய்யவேண்டுமென வாழ்த்துவதில் நிறைவைக் காண்கின்றேன்.

***விழாக் குழுவின் தலைவர்***
**வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்**
*அதிபர்,*
*யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.*

## வெளியீட்டுரை

விலங்கினமான மனிதன் ஏனைய விலங்குகளிடமிருந்து வேறுபடுவதற்குப் பகுத்தறிவு உதவுகின்றது. அந்தப் பகுத்தறிவு மேம்படுவதற்கு அறிவுஞானம் வேண்டும், ஆத்மஞானம் வேண்டும், மக்களை உயர்நெறிக்கு இட்டுச் செல்ல எண்ணும் சமூக ஞானம் வேண்டும். இவ்வாறான ஞானங்களை வளர்க்கும் செயல்களையும் உதவிகளையும் செய்பவர் பெரியவர்களாவர். இவற்றுள் ஒன்றையோ பலவற்றையோ ஒருவன் தனித்தோ அல்லது இணைந்தோ பல்லாற்றானும் சேவையாகச் செய்தல் வேண்டும். அதுவே மானிட வாழ்வில் வேண்டியது. அவ்வாறு சேவையாகச் செய்துகொண்டிருப்பவர்களை இக்கைந்நூலில் இடம்பெறச் செய்தல்வேண்டுமென்பது மணிவிழாச் சபையாரது தீர்மானம்.

மணிவிழாச் சபை கலாநிதி கனக. நாகேசுவரனுக்கு விழாவெடுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் சமூகத் தொண்டர்களை – ஞானச் செல்வர்களைப் போற்றுவது பொருத்தமானது. அது சமூகசேவை செய்வாரைத் தூண்டும் வகையில் அமையும் ஆதலால், அவர்கள் வாழுங் காலத்தில் அதாவது சுகதேகியாக இருக்குங் காலத்தில் கௌரவிக்கப் பெறுதல் உகந்ததும் – உயர்ந்ததுமாகும்.

மணிவிழாச் சபையினர் சிபார்சு செய்த, சான்றோருடைய குறிப்புக்களைத் திரட்ட முயன்றவேளையில் அவற்றை முழுமையாகத் திரட்டமுடியாது போய்விட்டது. ஆதலால் சிலரது சுயவிபரங்களையும் இன்னும் சிலரது பெயர் விபரங்களை மட்டும் கைந்நூலிற் சேர்க்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. என் செய்வது. முழுமையான ஒத்துழைப்புக் கிடைக்காமற்போனதே அதற்குக் காரணமாகும். ஒத்துழைப்பு நல்கியோரது விபரங்கள் ஓரளவு திருப்தியாக அமைந்துள்ளன. எனினும் **இக்கைந்நூல் முழுமையானதன்று.** மிகப்பெரிய சேவைகளைச் செய்யும் பல பெரியார்கள் இருக்கின்றார்கள். அவர்களது வரலாறுகளையும் தொகுக்கப்பெற்று வெளிவருதல் வேண்டும். அதுவுங் காலத்தின் தேவை. அவற்றுக்கெல்லாம் இக் கைந்நூல், முன்னோடியான எடுத்துக்காட்டாகும், அவ்வளவே!

குறுகிய இடைவெளியில் வெளிவரும் இந்நூல் போலல்லாது, இன்னும் பலரது விபரங்களையும் திரட்ட உத்வேகங் கொடுத்து, வெளிப்படுத்தப் பெரியோர்களைத் தூண்டிவிடவேண்டும் என்பதும், எமது விருப்பமாகும்.

இவற்றில் இடம்பெறும் சமூகமாமணிகளான ஞானச் செல்வர்களை வாழ்த்துவது நம்கடன்.

**'வாழ்த்துவதும் வானவர் தாம் வாழ்வான்'** என்று திருச்சதகம் கூறுவதற்கமைய இறைவனைத் தேவர்கள் தாம்வாழ வாழ்த்துகின்றார்கள். சிவபுராணத்துள்

**'இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் வாழ்க'**

என வருவதும், என்னோடு வாழ்ந்தால் நான் வாழ்வேன் என்பதுதானே! – மணிவாசகம் –

யாரேனும் ஒன்று நல்லதாகச் செய்யும்போது, வாழ்க என்கின்றோம்.

பெரியோர் தம்மிலும் வயது குறைந்தோரை வாழ்த்துவதே பெரும்பான்மை. எனினும் மக்கள் தம்மிலும் மேம்பட்ட இறையை வாழ்த்துவதும் ஞானச் செல்வர்கள் இறைவனை வாழ்த்துவதையும் நாம் அறிவோம். உலகு இன்புற நல்லோர் வாழவேண்டும் என நினைக்கும் நிலையில் வாழ்த்துக்களை வயது பேதமின்றி எவரும் வழங்கலாம்.

இறைவனை வணங்கும் மக்கள், பரம்பொருளாகிய அந்த அழியா (இயற்கை) அழகை வாழ்க என்று வாழ்த்துவது எது போன்றதென்றால், மக்களைப் புரந்தூட்டும் பெற்றோரை அம்மக்கள் வாழ்த்துவது போன்றதே! அல்லாமலும் பெற்றோர் முதுமைபெறக் குழந்தை உள்ளம் போன்று மென்மை பெறுவர். மக்கள் தாம் குழந்தையாக இருந்த காலத்தில் பெற்றோர் பேணினர். பின்பு பெற்றோரை வளர்ந்த பிள்ளைகள் பேணவேண்டும், போற்றித் துணைநிற்க வேண்டும். அதுவும் இல்லற வாழ்வாலேதான் ஆகும் சமூகக் கடமையே! மேலும் 'பல்லோரும் ஏத்தப் பணிந்து' என்ற சிவபுராணத்தின் ஈற்றடியை நோக்கினால்;

சிவன்பாதம் தேர்ந்தவர்கள் ஞானிகள். அவர்கள் அவனுடன் கலந்து அவனைப் புகழும் பெற்றியவர். ஆக, காலத்தால் முன்பு பின்பு

என்றில்லாமல் பல காலத்தவரும் பலநிலையினரும் பணிந்து புகழ்ந்து போற்ற உலகினர் யாவரும் பயன்பெறுவர்.

சாதாரண உலகியற் போக்கினும் மனிதன் ஏத்திப் பணிந்து அடுத்தவரைத் தம்வலைக்குள் வீழ்த்திப் பயன் துய்ப்பதைக் காணலாமே!

ஏத்துதல் – புகழ்தல் என்பதாம், பணிந்து ஏத்தச் சிவடினக்கீழ் சிவபுரத்தின் உள்ளார் எனக் கொண்டு கூட்டிடப் பொருள் சிறக்கும்.

யாவரும் பயன்பெறவும் சமூகப் பணி செய்திடவும் இல்லறமே ஏற்றதாகும். உலகு பயன்பெற வாழும் அந்த வாழ்வே பயன்மிக்க மனித வாழ்வாகும். அந்த வாழ்வே என்றும் வேண்டத்தக்கதும் ஆகும். இல்லறத்தில் இணைவது தம்சுய இன்பத்துக்காகவல்ல. அந்த இணைப்பு – இணைவிழைச்சு – ஈர்ப்பு சமூகத்துக்குப் பணியாற்ற அவசியமானது.

ஒருவனும் ஒருத்தியும் இணைந்து இல்லறம் என்னும் நல்லறம் காக்க இயற்கையாகக் கிடைத்த ஊக்கிதானே இணைவிழைச்சு ஆகிய அது! அதனை உணர்ந்து அறிவோடு நடத்தல் அவசியமானது. ஒருவனும் ஒருத்தியுமாக வாழ்வது வெறும் காமச் சேர்க்கையாகாது – ஒழுக்கக் கேடானதுமல்ல, அது வேண்டப்படுவதே! நல்ல ஒழுக்க வாழ்வு வாழ்ந்து கொண்டு விருந்து கோடலுடனான சமூகத்தொண்டு இல்லறத்தானுக்குச் சிறப்பானதும் உரிமையானதுங் கூட.

**'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்**
**கைம்புலத்தார் ஓம்பல் தலை'**

இவ்வாறு வள்ளுவரும் ஓம்பல் செய்வான் தன்னை நிரற்படுத்துகையில் அவனை ஈற்றில் நிரற்படுத்தியுள்ளார். அவன் தனக்கு முன்னுரிமை தரவில்லை.

இதனை உடன்பட்டு மேலும்

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் என்றிவரோ**
**டின்புறத்தா னுண்ட லினிதாமே – அன்புறவே**
**தக்கவரை யின்றித் தனித்துண்டல் தான் கவர்மீன்**
**கொக்கிருந்த லென்றே குறி.**

எனத் தனித்துண்ணலை விரும்புவான் தாழ்ந்தவன் என நீதி வெண்பா கூறுகின்றது என்பதும், தம்மைப் பிறர் கருதி வாழாத

வாழ்க்கையன்று என்பதாலும் கூறப்பெறும் சமூக உணர்வுகள் மனிதனிடம் இயல்பாகவே வரவேண்டியவை.

வெம்மை யுடைய தடிசில் விழுப்பொருள்கள்
செம்மை யுடையதாம் சேவகம் – தம்மைப்
பிறர்கருதி வாழ்வதாம் வாழ்க இம்மூன்றும்
உறவருவ தோர்வதா மோர்பு

என அறநெறிச் சாரம் உரைக்கும். ஆக, எந்த ஒரு மனிதனுக்கும் இருக்கவேண்டியது சமூக நலனுக்காக, பொது நலனுக்காக உழைப்பது தான் எனல் வேண்டும்.

மனிதனுக்கு இருக்கவேண்டிய சமூகத் தொண்டை அந்த மனிதனிடமிருந்து எடுத்துக்கொண்டுவிட்டால் விலங்கினமான அவன் மக்களாகத் தோற்றந் தந்தாலும் மாக்களாகத் தானே இருப்பான். 'விலங்கொடு மக்களனையர்...' என்பதும் அது.

மக்கட் சுட்டல்லாத அஃறிணையான விலங்கு என்றிருக்கும் விலங்கிடமும் இணைவிழைச்சு இருக்கிறது. மனிதனிடமும் இருக்கிறது. பகுத்தறிவால் புடமிடப்படும் சமூகத் தொண்டொன்றே அவனை வேறுபடுத்துகின்றது. அவன் விலங்காகிவிடாமல் பகுத்தறிவு காத்து நிற்கின்றது. ஆக, சமூகத் தொண்டாற்றுபவனே மனிதப் பண்பு உடையவனாகின்றான். மனிதன் அவனே! அவனே மனிதருள் மாணிக்கம். அது பகுத்தறிவால் மட்டுமே சாத்தியமாகும்.

மனிதப் பண்புடன் வாழ்வாங்கு வாழும் பெரியோர் வரலாறு பெறுவர். ஓரளவுக்கேனும் ஏதோ ஒரு வகையில் **சமூகமாமணியாக** விளங்கும் பெரியோர் இக் கைந்நூலில் இடம்பெற்றுள்ளனர். மணிவிழாக் குழுவினர் இக்கைந்நூலை வெளிக்கொணர்வதனை வாழ்த்தி வணங்கி வரவேற்போமாக.

– மனிதம் வாழ்க வாழ்க –

*மணிவிழாக் குழுவினர் சார்பில்*

**ம.ந.கடம்பேசுவரன்**

2013-04-06

## முன்னுரை

இன்றுவரை என்னுயிரை என்னுடலுடன் பொருத்தி பேரருள்புரியும் எல்லாம்வல்ல இறைவனுடைய திருவடிகளைச் சிந்தித்து வந்தித்து வணங்குகிறேன்; வாழ்த்துகிறேன் – நமசிவாய வாழ்க! என்னுயிருடன், உணர்வுடன் கலந்து வாழ்பவர்கள் சமுதாய நலன்விரும்பிகள், சமுதாயச் சிற்பிகள் சிலருடைய குறிப்புக்களையேனும் தாங்கிவரும் இந்நூல் வெளிவரவேண்டும் என்று தீர்மானித்துத் தொழிற்பட்ட மணிவிழாக்குழுவினருக்கு முதற்கண் அடியேனின் பணிவான பெருநன்றி. பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன் **M.A.** அவர்களின் கடின, துரித, அரிய இம்முயற்சி பெரிதும் உவந்து பாராட்டப்படத்தக்கது.

இற்றைநாளில் பெற்றாரையும், உறவினர்களையும், முதியவர்களையும், இயலாதவர்களையும், தொண்டுபடு கிழங்களையும் கைவிட்டுப் பாராமுகமாக வாழும் உணர்வுடன் மரங்களாகவும், மாக்களாகவும், மரத்துப் போய்விட்ட உணர்வினர்களாக மனிதர்கள் நடமாடுவதையும் காண்கின்றேன். மாறாக, இப்பூவுலகிலே உலகோம்பும் வாழ்வில் தம்மை இணைத்துக் கொண்டோரைப் பற்றிய ஒரு நூல் வெளிவருவது பேருவகை தருகிறது. பிறருக்காகவென எதையாவது செய்ய நினைப்போரை இன்று விரல்விட்டு எண்ணிவிடலாம். கொள்கை, உண்மை, மேன்மை, நன்மை செய்யும் சீவன்கள் தொகையற்றுவிட்டது. மதாபிமானம், மொழியபிமானம், பண்பாட்டபிமானம், சுயாபிமானம், சேவாபிமானம், மனிதாபிமானம் என்பனவும் உள்ளனவா? ஏன்ற ஏக்கம் மேலெழுகிறது. அந்த எண்ணம் நிறைவேறும் வகையில் 'ஈதல் இசைபடவாழ்தல்' என்ற வகையில் வாழுஞ் சிலரது குறிப்புரைகள் இங்கு இடம்பெறுகிறது.

மணிவிழாக்குழுவினரின் மனதில் உதித்த இந்நூல் முயற்சி பெருநிம்மதி தருகிறது; ஓரளவு மனநிறைவையும் தந்துள்ளது. வாழ்நாளிலே இனம், மொழி, மதம், கலை, கல்வி, சேவை என

உழைத்தவர்களின் திருவுருவங்களும் விபரக் குறிப்புகளும் கொண்ட இந்நூல் அடியேனது மணிவிழாவிலன்று (06.04.2013) வெளியிடப்படுவதும் தமிழ்த் தெய்வம் முருகப் பெருமானின் பெருவிருப்பே என எண்ணுவதோடு, இவர்களும் இவர்களைப் போன்றோரும் வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்குமான பேரருளையிறைஞ்சி வாழ்த்துகிறேன்.

"ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்
ஞானத்தால் தொழுவலேன் நானலேன்"

**- அப்பர் சுவாமிகள் தேவாரம்**

**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்** M.A. PhD,
*முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,*
*சப்ரகமுவ பல்கலைக்கழகம்,*
*பொகுல்லோயா.*

# மணிவிழா நாயகனின் சுயவிபரக் கோவையிலிருந்து...



## கலாநிதி
## கனகசபாபதி நாகேஸ்வரன்

1. Full Name : Dr. Kanagasabapathy Nageswaran
2. Date of Birth : 05-08-1952
3. National Identity : 522184713 V
4. Permanent Address : No. 11/01, B.A. Thamby Lane, Vannarponnai, Jaffna.
5. Contact Telephone : 0714453466
6. Civil Status : Married
7. Permanent occupation & Service : Senior Lecturer, Gr.I, Department of Languages, Sabaragamuwa University of Sri Lanka, Belihuloya. Completed Twenty Three years (23) of Service.
8. Educational Qualifications :
   1) B.A.(Hons) in Tamil, University of Jaffna, Thirunelvely – 1979.
   2) M.A. in Tamil, University of Jaffna, Thirunelvely – 1988.
   3) Ph.D in Tamil, University of Peradeniya – 2008
9. Extra curricular activities :
   1) Conducted S.L.B.C Hindu religious programmes nearly Thirty years (30) of service in the National Tamil Service.
   2) One of the Running commentator of Hindu religious programmes.
   3) On of the audition artist in the Kathaprasangam in the S.L.B.C & the S.L.R.C
   4) Organizer of the Jaffna Thiruneriya Thamil Isai Sangam.

5) One of the Leading orator in the All Ceylon Kampan Kazhaka debating Team.
6) One of the committee members in the Tamil Literacy panel of State Art's Council, Ministry of Cultural & religious affairs.
7) One of the Advisory members of the S.L.B.C religious programme.
8) Partipated in the Second World Sanskrit Conferences as Jaffna University delegate held in Alahabad, Northe India, 1979.
9) Delivered Several Hindu religious Discourses all over the Island and Malaysia, London, Switerland and India.
10) One of the Heriditary Trustees in the Mother goddess Sri Nagapooshani Amman Thevasthanam, Nainativu.
11) Participated International Conference on Translations held in S.L.F.I, 3rd to 5th July, 2002.

10. Honoured with Titles :
1) Arul mozhi selvar.
2) Cot perazhi.
3) Cencot Kondal.
4) Navarasa Kalai Gnani.
5) Siddhnata pandit.
6) Mani Mozhi Vari.
7) Cenchol Vannar.
8) Arud Kalai ma mani.
9) Vaakeesa Kalanithi.
10) Justice of the Peace (Whole Island)

11. Previous Occupatient & Experiences :
1) Sub-Editor – Eelanadu - Tamil daily paper, 1979 to 1980.
2) Programme producer, Relief Announcer, S.L.B.C, 1980 to 1985.
3) Temporary Assistant Lecturer, Department of Tamil, University of Jaffna 1985 to 1992.
4) Tutorial Staff, St. Patrict's College, 1994 to f1995.

12. Participated International / Natioal conferences Switzerland, London & India.

13. Writer 10 books and 200 research articles.

# கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் மணிவிழாவில் (06.04.2013) கௌரவம் பெறுவோர்

| | பெயர் | வயது | துறை |
|---|---|---|---|
| 1. | திரு.வை.க.சிற்றம்பலம் | 99 | தமிழ்க்கவிதை |
| 2. | திரு.க.வைத்தீஸ்வரக்குருக்கள் | 97 | வேதாகமம் |
| 3. | திரு.ஐ.சரவணபவன் | 85 | சோதிடக்கலை |
| 4. | நாக. சிதம்பரநாதர் | 85 | ஆன்மீகம் |
| 5. | செல்வி. விசுவாம்பா விசாலாட்சி | 82 | சமய இலக்கியம் |
| 6. | பேராசிரியர் வி.சிவசாமி | 80 | ஆய்வறிவியல் / வரலாறு |
| 7. | பண்டிதை பொன். பாக்கியம் | 76 | தமிழ்மொழி |
| 8. | திரு.கா.ஆ. தியாகராசா | 75 | அறப்பணி |
| 9. | திரு.க. பரமலிங்கம் | 73 | இந்து விவகாரம் |
| 10. | திரு.ச. விநாயகமூர்த்தி | 72 | சொற்பொழிவு |
| 11. | திரு.ந. குழந்தைவேலு | 69 | தமிழ்த்துறை |
| 12. | பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் | 68 | சைவசித்தாந்தம் |
| 13. | பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் | 66 | தமிழ் இலக்கணத்துறை |
| 14. | திரு.மு.சபாநாதன் | 65 | திருப்பணி / சமூகநலன் |
| 15. | கலாநிதி ந.வி.மு. நவரெத்தினம் | 63 | பண்ணிசைத்துறை |
| 16. | டாக்டர் சோ. சபாநாதன் | 62 | சித்தமருத்துவத்துறை |
| 17. | திருமதி கிரிஷாந்தி ரவீந்திரா | 59 | நடனத்துறை |
| 18. | திரு.க. கணேசராசா | 59 | கல்லூரி நிர்வாகம் |
| 19. | திருமதி ச. அருள்நங்கை | 56 | இந்துக் கல்வித்துறை |
| 20. | திருமதி இமெல்டா சுகுமார் | 54 | சமூக நலத்துறை |
| 21. | டாக்டர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா | 53 | மருத்துவத்துறை |
| 22. | திரு.க. ஜெயநாயகம் | 52 | திருப்பணி / தொழிற்றுறை |
| 23. | திரு.க. இராசரெத்தினம் | 52 | குருகுல நிர்வாகம் |
| 24. | வைத்திய கலாநிதி நடராசா ஜெயக்குமார் | | மருத்துவத்துறை |



# முதுபெரும் புலவர், புலவர்மணி வை.க.சிற்றம்பலம் (1914)

பயிற்சிபெற்ற ஆசிரியரான இவர், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, வித்துவான் ந.சுப்பையாபிள்ளை என்னும் பெரியார்களைத் தமது நல்லாசிரியராகக் கொண்டவர். தமது இருபத்து மூன்றாம் வயதிலே தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம் நடாத்திய பரீட்சையில் தோற்றி இளந் தமிழ்ப்புலவர் என்னும் பட்டத்தைப் பெற்றார். 1939இல் யாழ். ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கப் பாலபண்டித பரீட்சையிலும் சித்திபெற்றவர். 1998இல் அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் 'முதுபெரும்புலவர்' எனும் பட்டத்தைச் சூட்டினார். 2002இல் இந்துக் கலாசாரத் திணைக்களம் 'கலாபூஷணம்' எனும் பட்டத்தை வழங்கியது. 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் யாழ். ஆ.தி. பாஷாவிருத்திச் சங்கம் 'புலவர்மணி' எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

ஒருபா ஒருபஃது, திருவிரட்டை மணிமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை, திருப்பதிகள், வித்தார கவிதைகளன்றி, கடவுள் மீது திருவூஞ்சல், திருப்பள்ளியெழுச்சி, மாவை முருகன் ஆற்றுப்படை, சந்நிதி முருகன் ஆற்றுப்படை என 40க்கு மேற்பட்ட பிரபந்தங்களைப் பாடியுள்ளார். அல்லாமலும் தனிப்படவே பல தனிநிலைச் செய்யுட்களையும், மெய்ச்சித்தி உபசாரப் பத்திரமென நூற்றுக்கணக்கானவற்றைப் பாடியுள்ளார். இவர் ஒரு புராணிகரும் கூட. இவர் ஆடம்பரத்தையோ, படாடோபத்தையோ விரும்பாத தம்பெருமை தாமறியாத தன்மையுடையவர். பேச்சளவில் மாத்திரம் வைத்துக்கொள்ளாது எதனையும் மக்கள் உணரும்படியான

சாதனையாளர். குன்றாத உணர்வுடைத் தொண்டராக, சேக்கிழார் சுவாமிகளின் வாக்குக்கு அடையாளமாக வாழ்ந்து வருபவர். புலமைச் செருக்குச் சிறிதுமில்லாத, புலவர்மணி சிற்றம்பலம் சிவபுண்ணியம் பெருக்கும் புனித கைங்கரியத்திற்குத் தன்னை அர்ப்பணித்த தனிப்பெரும் புலவராக விளங்குகிறார் என்பது ஒரு சிறிதும் மிகையாகாது. தள்ளாடும் வயதிலும் தளராத உறுதியோடு எழுதிக்குவிக்கும் பெரும்புலவர். வரலாறு அனைத்தும் மறதியின்றி எடுத்தியம்பும் கலைக்களஞ்சியம்.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் பேரில் ஞானச்சுடர் சஞ்சிகையிலே இவரது பாடல்கள் வெளிவந்த வண்ணமேயுள்ளன. ஓயாது தமிழ்ப்பணி, இலக்கியப்பணி, சைவப்பணி, சமூகப்பணி புரியும் இவரைக் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழாக்குழு பாராட்டிக் கௌரவிக்கிறது.



# புலவர்
# சி.விசாலாட்சி மாதாஜி
# (1921)

திருவீங்கோய் மலைச்சாரலில் உள்ள ஸ்ரீலலிதா சமாஜ ஆச்சிரமத்தில் கன்னிப் பெண்கள் மட்டுமே சகல காரியங்களையுஞ் செய்வார்கள். அவர்களின் தலைவர் போகினி ஸ்ரீவித்யா சரஸ்வதியிடம் வித்தியா மந்திரம் சந்தியாசா் புலவர் விசாலாட்சி பெற்றபோது சந்நியாசப் பெயராக "ஸ்ரீ விசுவாம்பா" என்ற நாமம் சூட்டப்பட்டது. மாதாஜி வன்னிப் பெருநிலப்பரப்பில் நல்லாசிரியராகப் பணியாற்றியவர். மகாதேவ ஆச்சிரமம், குருகுலம் போன்ற சமய நிறுவனங்களின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தவர். தன் அநுபவ ஞானத்தாலும், வசன வளத்தாலும் புலமையாலும் பல நூல்களை எழுதி வெளியிட்ட பெருந்தகை.

குப்பிளானில் சீனியர் சின்னையாவுக்கும் உமையாத்தைக்கும் திருமகளாகப் பிறந்தவர் விசாலாட்சி அம்மையார். 7 வயதில் பிரவேச தீட்சை பெற்றார். அம்மையார் குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பெற்றார். பிரவேச பண்டிதர், பாலபண்டிதர் பரீட்சையில் சித்திபெற்ற அம்மையார் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் சைவப்பெரியார் மு. ஞானப்பிரகாசம் அதிபர் அவர்களிடம் சைவ சித்தாந்தக் கல்வி கற்ற பெருமையுடையவர். இந்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் இராமநாதன் அவர்களின் அநுசரணை பெற்றுக் கற்பன கற்றுப் புலவர் ஆனார். கவியோகி சுத்தானந்த பாரதியாரைச் சிதம்பரத் தலத்தில் சந்தித்தார். அம்மையார் இருபத்தைந்திற்கு மேற்பட்ட நுல்களை எழுதி வெளியிட்டுள்ளார். 2008ஆம் ஆண்டு முதல் சைவசித்தாந்த கலாநிதி காசிவாசி செந்திநாத ஐயாவின் சிலை அருகே அமைந்த சோதி விநாயகர் ஆலயத் திருமடத்தில் தமது தவ வாழ்வை மேற்கொண்டு வருகிறார்.

**ஆக்கங்கள்**

- 1984 – மாணவர் மாதிரிக் கட்டுரைகள்.
- 1986 – கிளிநொச்சி ஜெயந்திநகர் மீனாட்சியம்மைத் திருவூஞ்சல்.
- 1986 – உடற்பிணி பகைமை தீர்க்கும் மருந்து (சம்பந்தர்)
- 1987 – கர்மயோகி அமரர் வே. கதிரவேலு
- 1989 – நல்லூர்க்கந்தன் நான்மணிக்கோவை
- 1991 – சிந்தனைத் தேன்துளிகள் (திரௌசகம் – நீத்தல் ....)
- 1992 – சைவ நாற்பாதங்கள் காட்டும் ஆலய வழிபாடு
- 1993 – யாழ் – தெல்லிநகர் ஸ்ரீ துர்க்கையம்பாள் நான்மணிமாலை
- 1995 – சிவவிரதமான்மியக் கதைகள்
- 1997 – சி... ஞானத்தமிழ் (நாடகம்)
- 1999 – ஸ்ரீ நவராத்திரி நாயகியும், தோத்திரமாலையும்
- 2000 – சிவனுக்குரிய பஞ்சதோத்திரமாலை
- 2001 – திருவாதவூரடிகள் புராணம் (உரையுடன்)

  பேலியகொடை ஸ்ரீபூபால விநாயகர் மும்மணிக்கோவை.
  செக்கடித்தெரு ஸ்ரீ கதிரேசன் ஆலயக் குடமுழுக்குப் பதிகம்.
  அவுஸ்ரேலியா சுபநகர் பத்திரகாளியம்மன் திருவூஞ்சல்.
  சிவராத்திரி புராணம்.
- 2002 – திருக்கேதீஸ்வரம் – சிறுகுறிப்பு – 2002

  சைவமும் தமிழும் வளர்த்த சான்றோன்
  குப்பிளான் சோதி விநாயகர் சைவமணிமாலை.
- 2003 – பாரதக் கதைகள்
- 2004 – சேக்கிழார் விருந்து

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இவரோடு படித்தவர் புலவர் திருமதி பூரணம் ஏனாதிநாதன் அவர்கள். சைவத்தமிழிலக்கியப் பணி புரிந்தமைக்காக கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் மணிவிழாக்குழு இவரைப் பாராட்டிக் கௌரவிக்கிறது.

15/04/2016



# பண்டிதமணி, கலாநிதி வைத்தீஸ்வரக் குருக்கள் (1926)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்திற் பிறந்த இவரது தந்தையார் கணபதீஸ்வரக் குருக்கள், தாயார் சிவயோகசுந்தராம்பாள். இவர் காரை. வலந்தலை அ.மி. பாடசாலையிலே 1–5 வகுப்பு வரை படித்தார். சுப்பிரமணிய வித்தியாசாலையிலே பஞ்சாட்சரக் குருக்கள் சுப்பிரமணிய தேசிகர் என்போரிடம் 6–8 வகுப்புகள் வரையிற் கற்றார். பின் இந்துக் கல்லூரியிற் சேர்ந்து படித்து V.S.L.C வகுப்புச் சித்தியடைந்தார். அளவெட்டி நாகபூஷணி வித்தியாசாலையிற் படித்து பிறிலிம் வகுப்புச் சித்திபெற்றார். பின்பு சுன்னாகம் பிராசீன பாடசாலையிற் சேர்ந்து சம்ஸ்கிருதம், வேத விசாரத சிதம்பர சாத்திரிகளிடமும், தமிழை மகாவித்துவான் கணேசையரிடமும் படித்துப் பாலபண்டிதர் தேர்விற் சித்தியெய்தினார். பின்பு பரமேசுவர பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிற் சேர்ந்து (1936 – 1939) கற்றுப் பண்டிதரும் பயிற்சிபெற்ற ஆசிரியருமாயினார்.

## கற்பித்த பாடசாலைகள் :

கொழும்பு விவேகாந்த வித்தியாலயத்திலே முதல் நியமனம் பெற்று அங்கு சபையின் சமய பாடப் பரீட்சைக்குழுவினருள் ஒருவராயிருந்து சேவையும் செய்ததோடு பத்திரிகைச் செய்தியாளராயும் பணிபுரிந்தார்.

## இவரது ஆக்கங்கள்

1. ஈழத்தச் சிதம்பரபுராணச் சுருக்கம்
2. தொடர்மொழிக்கு ஒரு மொழி
3. எதிர்ச்சொற் கோவை
4. உரைநடையாக்கம்
5. பாரத காப்பியத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு

6. பெரியபுராணம் – திருநகரப் படல உரை.
7. காரைநகரிற் சைவசமய வளர்ச்சி
8. மதிப்பீட்டுப் பயிற்சிக்கோவை தமிழ்மொழி 1–5 புத்தகங்கள் (க.பொ.த. சா/த)

**பதிப்பித்த நூல்கள்**

1. நாவலர் பிள்ளைத்தமிழ்
2. திருமுறைப்பெருமை
3. நன்னூற் காண்டிகையுரையும் நாவலர் பெருமானும்
4. திண்ணபுர அந்தாதியுரை
5. அருள்நெறித் திரட்டு – தொகுப்பு
6. திக்கையந்தாதியுரை
7. தோத்திரத் திருவெண்பா உரை
8. தன்னையந்தாதி உரை
9. திருவெழு கூற்றிருக்கை உரை
10. சீறாப்புராணம் – சில செய்யுட்கள் உரை
11. திருப்போசை வெண்பா உரை
12. ஈழத்துச் சிதம்பர புராணம் உரை
13. கார்த்திகேயப் புலவர் நினைவு மலர்
14. புதுமுறைக் கட்டுரைக் கோவைகள் 2

மேலும் காரைநகர் தமிழ் வளர்ச்சிக்கழகம், காரை மணிவாசகர் சபை என்பனவற்றின் தாபகராக இருந்து, புலவர்மணி மயில்வாகனார் போன்ற அறிஞர்களையும், சைவச் சான்றோர்களையும் இணைத்து தமிழ் நூல்களையும், மலர்களையும் வெளிக்கொணர்ந்தார். 1971ஆம் ஆண்டிலே இலங்கையிலே வெளிவந்த பதிப்புகளிற் சிறந்த பதிப்பு ஈழத்துச் சிதம்பரபுராணம் என்று அரசு தெரிவு செய்து இவருக்குச் சான்றிதழ் வழங்கியது. காரைநகர் சைவமகாசபைப் பொன்விழா மலர், காரை மணிவாசகர் சபைப் பொன்விழா மலர், திருவாதிரை மலர்கள் இவற்றின் ஆசிரியராயும் சேவையாற்றினார். இவரின் சைவ, தமிழ், சமூக சேவைகளைப் பாராட்டி கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு கௌரவிக்கிறது.



# சோதிட கலாநிதி
# ஐயாத்துரை சரவணபவன்
# (1928)

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தில் ஐயாத்துரை கமலாம்பாள் தம்பயினருக்கு 1928-09-12இல் மகனாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியினை ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் கற்று இப் பாடசாலையிலேயே சிரேஷ்ட தராதரப் பரீட்சையினை நிறைவு செய்தபின் ஆசிரிய தராதரப் பரீட்சையிலும் சித்திபெற்று நயினாதீவு மகாவித்தியாலயத்திலும் ஆசிரியராகக் கடமையாற்றி, பின் பலாலி ஆசிரியர் கலாசாலையில் வர்த்தக தராதரத்தினைப் பெற்று, பல இடங்களிலும் சேவையாற்றி யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியில் உப அதிபராகவும் கடமையாற்றியவர்.

இவர் சோதிடத்தில் கலாநிதியாவார். இவர்களது குடும்பம் சோதிடக்கலையில் பாண்டித்தியம் பெற்றது; நல்ல வரலாற்று ஆசிரியர். இவரெழுதிய கட்டுரை 'பொற்றாமரை' மலரிலே பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றிக் கொக்குவில் நாமகள் வித்தியாலயத்திலிருந்து பணி ஓய்வு பெற்றார். இவர் நலமுடன் வாழப் பிரார்த்திக்கிறோம். கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் மணிவிழாக்குழு இவருக்கு விருது வழங்கி கௌரவிப்பதில் பெரு மகிழ்வெய்துகின்றது.



# நாகலிங்கம் சிதம்பரநாதர்
# (1928)

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | நாகலிங்கம் சிதம்பரநாதர் |
| **முகவரி** | : | ஏழாலை |
| **பிறந்த திகதி** | : | 22.09.1928 |
| **பெற்றோர்** | : | தந்தை சின்னத்தம்பி நாகலிங்கம்<br>தாயார் செல்லமுத்து<br>(ஆத்மஜோதி நா.முத்தையா அவர்களின் உடன்பிறந்த சகோதரி) |
| **கல்வி பயின்றது** | : | ஆரம்பக் கல்வி சென். இசிதோர் கிறிஸ்தவக் கல்லூரி, ஏழாலை.<br>மல்லாகம் இந்து ஆங்கிலப் பாடசாலை<br>சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி – ஆங்கில எஸ்.எஸ்.சி. சித்தி |
| **குரு (தமிழ்)** | : | வித்துவான் சி. ஆறுமுகம் |
| **தொழில்** | : | 2–07–1951ல் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சேவை.<br>2–1–1967ல் உள்ளூராட்சி செயலாளர் சேவை.<br>3–1–1990ல் உள்ளூராட்சி தரம் I நிர்வாக சேவை<br>1987இல் ஓய்வு பெற்றமை. |
| **தற்போதைய முகவரி** | : | 46/1, டெம்பிளஸ் றோட், மவுன்லவேனியா. |

புராணங்கள் வாசித்தல், கேட்டல். 1956ஆம் ஆண்டு தொடக்கம் புகுந்த இடமான நீர்வேலியில் உள்ள அருள்மிகு கந்தசுவாமி தேவாலயத்திலும் மற்றும் அரசகேசரி விநாயகர், வாய்க்காற்தரவை விநாயகர் ஆலயங்களில் ஒவ்வொரு வருடமும் நடைபெறும் கந்தபுராணம், பெரியபுராணம், திருவாசகம், திருவாதவூரடிகள் புராணம், முற்றோதல் ஆகிய புராண படனங்களில் பங்கு கொண்டு வாசித்தலும், உரை சொல்லுதலும், உரை சொல்லுதல் பயிற்சியையும் அனுபவத்தையும் நீர்வேலி கந்தசுவாமி ஆலய பிரதம குருக்கள்

பிரம்மஸ்ரீ சு. இராசேந்திரக் குருக்களிடமும் நீர்வேலி பண்டிதர் நீ.சி முருகேசு அவர்களிடமும் பெற்றது. 1956ம் ஆண்டு தொடக்கம் 1955 வரை நீர்வேலி கந்தசுவாமி ஆலயம் மற்றும் உரும்பிராய் சிதம்பரசுப்பிரமணியம் ஆலயம் என்பவற்றில் தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் புராணபடனத்தில் ஈடுபட்டு இறைவன் திருவருளுக்குப் பாத்திரமானேன். மேலும் இக்காலங்களில் ஆவரங்கால் சிவன்கோயில் நல்லைநகர் ஆறுமுகநாவலர் மண்டபம், புத்தூர் சிவன்கோயில், திருஞானசம்பந்தர் ஆதீனம் என்பவற்றிலும் புராண படனங்களில் பங்குபற்றி நல்லூர் ஆதீன முதல்வரினால் "பௌராணிகர்" என்னும் விருதையும் பெற்றுள்ளார்.

1996ல் நீர்வேலிக் கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்த பொழுது யாழ். வைத்தீஸ்வரன் கோயில், யாழ் நகர் கதிர்வேலாயுதசுவாமி கோயில், பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலிலும் புராணபடனம் செய்து பின்னர் யாழ். நகரை விட்டு வெளியேறி தென்மராட்சி உசன் கந்தசுவாமி கோயிலில் தங்கி கந்தபுராணப் படனத்தில் பங்குகொண்டு அங்கு தங்கியிருந்த சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பாராட்டையும் நல்லாசிகளையும் பெற்றார்.

1998இல் மலையகமான நாவலப்பிட்டி வந்து அங்குள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் சஷ்டி விழாக்களில் கந்தபுராண யுத்த காண்டமும் மார்கழி திருவெம்பாவைக் காலங்களில் திருவாதவூரடிகள் புராணமும் தொடர்ந்து செய்து வருகின்றார். இந் நிகழ்ச்சி மலையகத்தில் வேறு எந்த ஆலயங்களிலும் நடைபெறுவதில்லை. மலையகத்தில் வட்டவளை ஆஞ்சநேய ஆலயத்தில் ஆன்மீக சொற்பொழிவு செய்தமைக்காக நுவரெலியா மாவட்ட இந்து கலாசார பேரவைத் தலைவரினால் "ஆன்மீக அருளொளி" என்னும் விருதையும் பெற்றார்.

**பெற்ற விருதுகள்**

1. வட்டவளை ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலய அறங்காவலர் சபை – ஆன்மீக அருளொளி.
2. போகவந்தலாவை பழனி முருகன் கோவில் – சைவசித்தாந்தப் புலவர்
3. கினிகத்தேனை மங்கள விநாயகர் ஆலயம் – திருமுறைச் செல்வர்
4. பதுளை றொக்கில் காளிதேவஸ்தானம் – சிவத்தமிழ்மணி
5. உலக சைவப் பேரவையில் 1997ம் ஆண்டு தொடக்கம் ஆயுட்கால உறுப்பினராகத் தொண்டு புரிவதனால் 2004ம் ஆண்டில் சைவஜோதி என்னும் விருதையும் பெற்றமை.



# பேராசிரியர் குருமூர்த்தி விநாயகமூர்த்தி சிவசாமி (1933)

சமஸ்கிருதம், வரலாறு, நுண்கலைகள், இந்து பண்பாடு, தமிழ் முதலிய அறிவியல்களில் ஈடுபாடுள்ளவரான பேராசிரியர் சிவசாமி புங்குடுதீவினை வாழ்விடமாகக் கொண்ட திரு.குருமூர்த்தி விநாயகமூர்த்தி, மகேஸ்வரிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வராகப் பிறந்தார். இவர்கள் சித்த வைத்திய, சோதிட, சங்கீத, இந்து சமயப் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள்.

பேராசிரியர் வி.சிவசாமி ஆரம்பக் கல்வியினையும், இடைநிலைக் கல்வியின் ஒரு பகுதியையும் புங்குடுதீவு இறுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை, கனிஷ்ட ஆங்கிலப் பாடசாலை ஆகியனவற்றிலே கற்றபின் வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரியிலே (1950 – 1954 வரை) பயின்று இலங்கைப் பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வில் சித்திபெற்று நேரடியாக அனுமதி பெற்றார். அங்கு தமிழ், சமஸ்கிருதம், வரலாறு ஆகிய பாடங்களைப் பல பிரபல பேராசான்களிடம் கற்று (1958 இல்) பொதுக்கலைமாணிப் பட்டம் பெற்றார்.

இதன் பின் தாம் கற்ற யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த பட்டதாரிப் பிரிவிலே சமஸ்கிருதம், தமிழ், ஆகிய பாடங்களை லண்டன் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு (1958 – 1962 வரை) கற்பித்தார். இக் காலத்தில் தம்முடைய சமஸ்கிருத முதற்குருவும், பிரபல சமஸ்கிருதப் பேராசானுமாகிய கலாநிதி ம.த. பாலசுப்பிரமணியம் அவர்களின் தலைசிறந்த வழிகாட்டலிலே லண்டன் பல்கலைக்கழகம்

வெளிவாரியாக நடத்திய சமஸ்கிதச் சிறப்புக் கலைத் தேர்வில் (1961) இலே) நன்கு சித்தி பெற்றார். இத் தேர்விற்குச் சமஸ்கிருதத்தைப் பிரதான பாடமாகவும், கி.பி. 1000 வரையுள்ள இந்திய வரலாற்றினைச் சிறப்புப் பாடமாகவும், பிறிதொரு மொழியாகப் பாளியையும் கற்றார். இவ்வாறு சமஸ்கிருதம், வரலாறு ஆகிய பாடங்களிலே நல்ல தேர்ச்சி பெற்றார்.

இக்கால கட்டத்திலே தமிழ்மொழி மூலம் பட்டப்படிப்புகள் இலங்கைப் பல்கலைக்கழகத்திலே தொடங்கப்பட்டன. இதன் விளைவாக 1961– 1965 வரை ஒப்பந்த அடிப்படையிலே அங்கு உதவி வரலாற்று விரிவுரையாளராக நியமனம் பெற்றார். இக்கால கட்டத்திலே தமது அறிவினை மேலும் வளர்த்தார். இதன் பின்னர் 1974 வரை தான் முன்னர் கற்பித்த யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவிலே இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்குக் குறிப்பாக வரலாறு கற்பித்தார்.

இக்கால கட்டத்திலே இலங்கைப் பல்கலைக்கழகத்திலே சமஸ்கிருதத்திலே முதுகலைமாணிப் பட்டத்தினை (1969) இவர் பெற்றுக் கொண்டார். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முடியும் வரையுள்ள சமஸ்கிருதக் கல்வெட்டுப் பிரசஸ்திகள் பற்றியதாகவே இவரின் ஆய்வு அமைந்துள்ளது. இதிலே இலக்கிய அம்சங்களும், வரலாற்று அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. மேலும் இதே காலகட்டத்திலே இவர் கற்பித்த நிறுவனத்திலுள்ள மாணவர் மன்றமாகிய கலைக்கொத்து (Arts Cauldron) என்பதின் போஷகராகவும் சில ஆண்டுகள் செயற்பட்டார். மேலும் இக்கால கட்டத்திலே பேராசிரியர் கா. இந்திரபாலா 1971இலே தொடங்கிய யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகத்தின் முதலாவது செயலாளராகப் பல ஆண்டுகளாகச் செயற்பட்டு தொல்லியல் பற்றிய சில மேலாய்வுகளை மேற்கொண்டார்; தொல்லியல் குறிப்பாக சாசன விரிவுரைகளை ஒழுங்கு செய்தார்; பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

1974ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடங்கிய போது முதலில் இவர் இரண்டாம் தர சிரேஷ்ட வரலாற்று

விரிவுரையாளராக நியமனம் பெற்றார். ஓராண்டின் பின்னர் இரண்டாம் தர சிரேஷ்ட சமஸ்கிருத விரிவுரையாளராகவும், பின்னர் சமஸ்கிருத இணைப் பேராசிரியராகவும், பேராசிரியராகவும் நியமனம் பெற்று 1988இல் ஓய்வு பெற்றார். இலங்கைப் பல்கலைக் கழகங்களில் சமஸ்கிருத பேராசிரியராக நியமனம் பெற்ற முதலாவது தமிழர் இவரே என்பது குறிப்பிடற்பாலது. மேலும் சமஸ்கிருதத்துறையின் பொறுப்பு விரிவுரையாளராகவும் 1979 – 1998 வரை துறைத் தலைவாகவும் இவர் பணிபுரிந்துள்ளார். மேலும் நுண்கலைத்துறையின் பதில் தற்காலிகத் தலைவராகவும் சில காலம் நியமனம் பெற்றிருந்தார்.

கற்பித்தல் செயற்பாடுகளுடன் இவர் பல ஆய்வுகளையும் மேற்கொண்டு தமிழிலும் ஆங்கிலத்திலும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட நூல்களையும், நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் பிற கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவரது முதலாவது நூலான திராவிடர் ஆதி வரலாறும் பண்பாடும் எனும் நூல் அருட்திரு. எக்ஸ்.எஸ். தனிநாயகம் அடிகளாரின் முன்னுரையுடன் இவரின் மிகுந்த அபிமானத்திற்குரிய வரலாற்றுப் பேராசிரியரான இலக்கிய கலாநிதி ஹேமச்சந்திரராய் அவர்களுக்குச் சமர்ப்பணமாக வெளிவந்துள்ளது (1972). பிறிதொரு நூலான சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள் பேராசிரியருமான கலாநிதி கா. கைலாசநாதக் குருக்களுக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இவற்றை விட ஆரியர் ஆதி வரலாறும் பண்பாடும், பரதக்கலை, தென்னாசிய சாஸ்திரீய நடனங்கள், இந்துப் பண்பாடு அன்றும் இன்றும், Sanskrit tradition of the Sri Lankan Tamils Some aspect of South Asian Epigraphy, யாழ்ப்பாணக் காசுகள், தொல்லியல் ஓர் அறிமுகம், தமிழும் தமிழரும் முதலியன குறிப்பிடற்பாலன. மேலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்திய ஆய்வரங்குகள் சிலவற்றிலே ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொடக்க காலத்திலே பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினை உருவாக்கியவர்களில்

ஒருவராக, முதலாவது செயலாளராகவுமிவர் செயற்பட்டார். சிரேஷ்ட பொது அறையின் ஸ்தாபர்களில் இவரும் ஒருவராவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட ஆங்கில ஆய்வுச் சஞ்சிகையான The Sri Lanka Journal of South Asian Studies எனும் பிரசுரத்தின் பதிப்பாசிரியராகவுமிவர் பணிபுரிந்தார்.

வடமொழியைப் பொதுக்கலை, சிறப்புக்கலைப் பட்டங்களுக்கு மட்டுமன்றி, உப பாடமாக பரத நாட்டியம், கர்நாடக இசை, மெய்யியல், இந்து நாகரிகம், வரலாறு பற்றிய சிறப்புக்கலைத் தேர்வுகளுக்கும் இவர் கற்பித்தார். சமஸ்கிருதம், வரலாறு, இந்து நாகரிகம், இசை, நடனம், முதலிய துறைகளில் முதுதத்துவமாணிப்பட்ட ஆய்வுகளுக்கு மேற்பார்வையாளராகவும் பரீட்சகராகவும் இவர் செயற்பட்டார். இவரது ஆய்வுக் கட்டுரைகள் இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலிருந்து வெளிவரும் ஆய்வுச் சஞ்சிகைகள் சிலவற்றிலும் வெளிவந்துள்ளன. இவரின் பலதிறப்பட்ட பணிகளிற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அதன் வெள்ளிவிழாப் பட்டமளிப்பின் போது இவருக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்துள்ளது (1999). இவரது அறுபதாண்டு நிறைவு விழாவினை குறிப்பாக வரலாறு, இந்து நாகரிகம், சமஸ்கிருதம், இசை, நடனம், புவியியல் முதலிய துறைகளைச் சேர்ந்த பல ஆசான்களும் மாணவர்களும் மிகச் சிறப்பாக நடத்தி இவரைக் கௌரவித்தனர். இவருடைய சில பிரசுரங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. எடுத்துக்காட்டாக சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள் எனும் நூலுக்கு இலங்கை சாகித்தியமண்டலத்தின் பரிசு வழங்கப்பட்டது.

இவர் சகல ஆசிரியர்களோடும், மாணவர்களோடும் ஏனையோரோடும் சுமுகமான உறவுகளைப் பேணி வந்தார். இவ்வாறு பேராசிரியர் பலதிறப்பட்ட அறிவியல்களில் ஈடுபாடுள்ளவராக அனைவரோடும் நல்லுறவுகளைப் பேணி வந்துள்ளார். பல நன்மாணாக்கர்களையும் ஆய்வாளர்களையும் உருவாக்கியுள்ளார்.



# பண்டிதர்
# திருமதி பொன். பாக்கியம்
# (1937)

பண்டிதர் திருமதி பொன். பாக்கியம் அவர்கள் யாழ்ப்பாணம் சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வைத்தியர் திரு.நா.நாகமுத்து, திருமதி முத்துப்பிள்ளை என்போர் இவரது பெற்றோராவர். இவர் 21.2.1937இல் பிறந்தார். இவரது கணவனார் திரு.மு. பொன்னுத்துரை என்பவராவார். இவருக்குத் திருமதி லோகரஞ்சனா – ரவிக்குமர் B.A. (ஆசிரியை) என்பவர் ஒரேயொரு அருமைப் பிள்ளையாவார்.

அம்மையார் தமது ஆரம்பக் கல்வியை சுழிபுரம் அ.மி.த.க. பாடசாலையிற் பெற்றுக் கொண்டார். உயர்தரக் கல்வியை யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலும், ஆங்கிலக் கல்வியைப் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலையிலும் பெற்றுக் கொண்டார். 1956 – 1957ஆம் ஆண்டுகளில் யா/ திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமது ஆசிரியப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டார். 1958ஆம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்ற அம்மையார் யா/ திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி, வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலை, முரசுமோட்டை முருகானந்தா வித்தியாசாலை, யா/ திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை, யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி என்பவற்றில் ஆசிரியப் பணியாற்றினார். 39 வருடகாலம் ஆசிரியப் பணியாற்றிய அம்மையார் 1996ஆம் ஆண்டு டிசம்பரில் ஓய்வு பெற்றார்.

1965ஆம் ஆண்டு பண்டிதர் பட்டம் பெற்ற அம்மையார் தமது 19 வயது தொடக்கம் மேடைப் பிரசங்கம் செய்ய வல்லவரானார். இந்த நாடு

முழுவதிலும், சிங்கப்பூர், மலேசியா முழுவதிலும் தமிழ் சமயச் சொற்பொழிவாற்றிப் பெரும்புகழ் கொண்டார். இசை கலந்த அம்மையாரின் சொற்பொழிவும், அவரது கம்பீரமான சிறந்த குரல் வளமும் அவருக்குப் பெரும் புகழைக் கொடுத்தன. அம்மையார் நாவலர் சரித்திர ஆராய்ச்சி என்னும் நூலை ஆக்கினார். இதுவே வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தின் கன்னி நூல் வெளியீடாகும். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மௌன தவமுனிவர் பொ. கைலாசபதி, பண்டிதர் நீர்வேலி செ. துரைசிங்கம், பண்டிதை திருமதி சத்தியதேவி துரைசிங்கம், வித்துவான் ந. சுப்பையாபிள்ளை, வித்துவான் பொன். முத்துக்குமாரன், வித்துவான் க.வேந்தனார், பண்டிதர் அருட்புலவர் அ.ஆறுமுகம் என்போர் இவருக்குத் தமிழ், சமயம் கற்பித்த ஆசான்களாவர்.

பண்டிதை அவர்கள் பல சமய நூல்களை ஆக்கியுள்ளார். கவிதை ஆக்கத்திலும் சிறந்த ஆற்றல் படைத்த அம்மையார் பல நூற்றுக்கணக்கான பாடல்களை ஆக்கித் தமிழுலகுக்கு அளித்துள்ளார். வாழ்த்துக் கவிதைகள், சரம கவிகள், பாடசாலைக் கீதங்கள், கோவில் திருப்பதிகள், ஊஞ்சல்கள் என்றிவைகள் உள்ளன. அம்மையார் அவர்கள் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி என்பவற்றிற் பங்குபற்றிப் பல வெற்றிகளைப் பெற்றுள்ளார். கலாசாரப் பேரவை நடத்திய திறந்த கவிதைப் போட்டியில் 2007ஆம் ஆண்டு அகில இலங்கையில் முதலாம் இடத்தைப் பெற்றார். 1996ஆம் ஆண்டு இந்து சமயப் பேரவையால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் 'நாவலரே மீண்டும் வாரீர்' என்னும் கவிதை முதலாம் இடத்தைப் பெற்று அம்மையார் தங்கப்பதக்கம் பெற்றார். இவர் சிவத்தமிழ் விருது பெற்றவர். இவர் சிவத்தமிழருவி, செந்தமிழ்மணி, கலைவாரிதி என்னும் பட்டங்களையும் பெற்றவர்.

அம்மையார் அவர்கள் இளமையிலே தொடங்கிக் காந்தீயக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர். யாழ்ப்பாண ஆரிய

திராவிட பாஷாவிருத்திச் சங்கம், வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கம் போன்றவற்றில் பாலபண்டித, பண்டித வகுப்பு மாணவர்களுக்கும் கற்பித்து வந்துள்ளார். அத்துடன் நிர்வாக உறுப்பினராகவும், உத்தியோகத்தராகவும் நீண்டகாலம் கடமை யாற்றியுள்ளார். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் நூல் வெளியீட்டுச் சபைத் தலைவராக இருந்து இன்றும் கடமையாற்றுகின்றார்.

அம்மையார் அவர்கள் தமிழ்த்துறையில் மாத்திரமன்றி விளையாட்டுத் துறையிலும் வீராங்கனையாகச் சாதனை படைத்தவராக விளங்கியதோடு, பாடசாலைகளிற் சிறந்த பயிற்றுவிப்பாளராகவும் விளங்கினார். இன்றுவரை சலிப்படையாது தமிழ்த்தொண்டு புரிந்துவரும் அம்மையாரின் சேவை மேலும் நீடித்து நிற்க அவருக்கு நிரம்பிய தேக சுகத்தை அருளவேண்டுமெனப் பெருமானைப் பிரார்த்திப்போம்.



## ‘திருமுருகமாமணி’ காசிப்பிள்ளை ஆறுமுகம் தியாகராசா (1938)

நயினாதீவு ஆறுமுகம் வடிவாம்பிகை தம்பதியின் மூத்த ஆண் மகனாக 25-02-1938 இல் நயினாதீவில் பிறந்தார். ஆரம்பக் கல்வியினை நயினாதீவு கணேச வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியினை நயினாதீவு மகாவித்தியாலயத்திலும் கற்றுச் சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையை யா/ முத்துத்தம்பி வித்தியாலயத்தில் (S.S.C) எழுதிச் சித்திபெற்றார். இவரின் தந்தை வழியினர் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் பரம்பரை அறங்காவலர்கள். அரசினரால் நடத்தப்பட்ட எழுதுநர் தேர்வுப் பரீட்சையிலும் சித்திபெற்று அரச சேவையில் 16-04-1959ஆம் ஆண்டு சேர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் சேவை செய்ததோடு சென்ற இடமெல்லாம் தன்னாலான பொதுத் தொண்டுகள் பல செய்ததுடன் ஆலயம், பாடசாலைகள், சாய் சமித்திகள், பஜனைக் கோஷ்டிகள், அறப்பணி நிலையங்கள் பலவற்றில் பல்வேறு பதவிகள் வகித்தார்.

சலம்பூவொடு தூபமும் தமிழோடிசை பாடலும் ஒரு போதும் மறந்தவரில்லை. நெக்குருகப் பண்பாடும், ஆற்றலும் ஆளுமையும் கீர்த்தியுமிக்கவர். ஏற்பட்ட அசாத்தியமான சூழ்நிலையின்போது தீவுப்பகுதி தெற்குப் பிரதேசச் செயலகத்தில் உதவி அரசாங்க அதிபராக 22-12-1991இல் கடமையேற்றார். நயினாதீவின் பல தேவைகளையும் தீவுப்பகுதி மக்களின் தேவைகளையும் கடற்படை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து உணவுப் பொருட்கள் எரிபொருட்கள் தருவித்தும், க.பொ.த (சா.தர), க.பொ.த (உ.த) பொதுப் பரீட்சைகளை நடத்தியும் வந்தமையை மக்கள் எளிதில்

மறந்துவிடமுடியாது. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் தலைவராகப் பல தடவை பணியாற்றியதுடன் இப்பொழுதும் தலைவராகப் பணியாற்றி மிகத் திறம்பட பக்திபூர்வமாக மகாகும்பாபிஷேகத்தினை நிறைவேற்றியுள்ளார். இவரது காலத்திலேயே அம்பாள் ஆலய மேற்றளம் சீமெந்துக் கொங்கிறீங் இடப்பட்டது. புத்தளம் முத்துமாரியம்மன் கோயில் அறங்காவலர் சபைப் செயலாளராகப் பணி செய்து அங்கு தமிழ் வித்தியாலயத்தினை உருவாக்கிய பெருமை இவருக்குரியதே. வவுனியா கோயிற்குளம் அகிலாண்டேசுரர் சிவன்கோவில் போசகராகவும் தொண்டு செய்கிறார். கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் மணிவிழாக்குழு இவரை நீடு வாழப் பிரார்த்தித்து விருது வழங்கிக் கௌரவிக்கிறது.



# அறங்காவலர் பரமலிங்கம் கந்தசாமி பரமலிங்கம்

பரமலிங்கம் கந்தசாமி நாகமணி நாகரெத்தினம் தம்பதியினரின் மகனாகப் பிறந்த இவர் ஆரம்ப, இடைநிலைக் கல்வியை முறையே நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலை, நயினாதீவு மகாவித்தியாலயத்திலே பெற்றுச் சிரேஷ்ட தராதரப்பரீட்சையில் சிறப்பாகத் தேர்ச்சியடைந்து 1958இல் அரச எழுதுவினைஞர் சேவையில் இணைந்து கொண்டார். பாடசாலையில் படிக்கும்போது இல்ல மெய்வல்லுநர் போட்டியில் சிறந்த வீரனாகத் திகழ்ந்தார்.

1973இல் இலங்கை நிர்வாக சேவை வகுப்பு IIIஇல் இணைந்து 1984இல் வகுப்பு I க்குத் தரமுயர்வு பெற்று உதவி ஆணையாளர் பதவி வகித்து 1993இல் வடக்கு கிழக்கு மாகாண கமநல சேவைகள் / காணி ஆணையாளராகப் பதவியுயர்வு பெற்றார்.

1992-2002 காலப்பகுதியில் வடக்குக் கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு வீதிஅபிவிருத்தி, சிறு கைத்தொழில், கிராம அபிவிருத்தி, மனிதவள மேம்பாட்டு அமைச்சின் செயலாளராகவும் இந்து கலாசார அமைச்சின் செயலாளராகவும் 2007 – 2001 காலப்பகுதியில் வடமாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். நயினாதீவு ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினால் விளையாட்டுப் போட்டிகள் நயினாதீவில் நடாத்தப்பட்டபோது அப்போது யாழ் அரச அதிபராகவிருந்த வேணன் அபயசேகரவை அழைத்துவந்த பெருமைக்குரியவர்.

அரச சேவையில் 52 வருடங்கள் சேவையாற்றிய பின் நயினாதீவு சமூக, பொருளாதார, கல்வி, கலாசார அபிவிருத்திச் சங்கத் தலைவராகவிருந்து சேவையாற்றி வருகிறார். இவர் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர். இவரது சேவைகளைப் பாராட்டி கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் மணிவிழாக் குழுவினர் விருது வழங்கிக் கௌரவிக்கின்றனர். இவர் ஆரோக்கியத்துடன் சுகமாக வாழப் பிரார்த்திக்கின்றோம்.



# சபாரத்தினம் விநாயகமூர்த்தி (1941)

சபாரத்தினம் விநாயகமூர்த்தி ஆகிய இவர் 1941-07-28இல் வர்த்தலைவிளான் தெல்லிப்பழையில் பிறந்தார். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்று, பலாலி ஆசிரிய கலாசாலையில் (1964 – 65) ஆங்கில விசேட பயிற்சி பெற்றார். பேராதனை பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம், தமிழ், வரலாறு பாடங்களைப் பயின்று (1974) கலைமாணிப் பட்டத்தையும் பட்டப்பின் படிப்பாக இந்து நாகரிகத்தில் (1977) யாழ் பல்கலைக்கழக டிப்ளோமா பட்டதாரியுமானார்.

ஆங்கில ஆசிரியராக அரச பாடசாலையில் ஏறக்குறைய பதின்மூன்று ஆண்டுகள் சேவை செய்தபின் யாழ் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் போதனாசிரியராகப் (1976–2001) பதவி பெற்று 2003ம் ஆண்டுவரை வருகைநிலைப் பணியை மேற்கொண்டார். சில ஆண்டுகள் ஆங்கில வருகை விரிவுரையாளராக யாழ் – திறந்த பல்கலைக்கழகத்தில் சேவையாற்றினார். இவர் கல்வியிற் சிறந்தவராக விளங்குவதற்கு இவருக்குக் கிடைத்த உறவுகளே காரணம் என்பதற்குச் சான்றாக, தவமுனியாக, தமிழ் முனிவராகத் தவவாழ்வு வாழ்ந்த வித்துவ சிரோன்மணி பிரம்மஸ்ரீ சி. கணேசையாவுடன் நெருங்கிப் பழகித் தொண்டராக இருந்து பேற்றினைக் குறிப்பிடுவதோடு அவரது அருளாசியின் பயன் என்றும் கூறமுடியும்.

மேலும் குருநாதராகச் செந்தமிழ்மணி பொன். கிருஷ்ணபிள்ளை (விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை) அவர்கள் சமயச்

சொற்பொழிவுகள் ஆற்றக் கட்டளையிட்டார். திருக்கேதீஸ்வரம் திருவாசகமடத் திருவாசக விழாவில் 1964இல் பேருரை ஆற்றியதிலிருந்து தொடர் சொற்பொழிவுகளை மேற்கொண்டார். எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். திருமுறைச் சொற்பொழிவுகள் – குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயம், கரவெட்டி வெல்லன் விநாயகர் ஆலயம், கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம், நீர்கொழும்பு இந்து மகாசபை என்பனவற்றையும் பெரியபுராணச் சொற்பொழிவுகளாக தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம், கந்தபுராணச் சொற்பொழிவுகளை வெல்லன் விநாயகர் ஆலயம், குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயம் போன்றவற்றில் ஆற்றினார். இலக்கியச் சொற்பொழிவுகளாகக் கம்பராமாயணம், வண்ணை வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தானத்திலும், வேறு இடங்களிலும் ஆற்றினார். வானொலி நேர்முக வருணனையை விசேட உற்சவ காலங்களில் ஆற்றியுள்ளார்.

எடுத்துக்காட்டாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் நல்லைக்கந்தன் ஆலயம், துர்க்காதேவி தேவஸ்தானம், திருக்கேதீஸ்வரம் போன்ற இடங்களில் தொடர்ந்து சிலகாலம் ஆற்றியுள்ளார்.

பல ஆலயங்களில் விழாக்களிலெல்லாம் இவரது சொற்பொழிவு தனித்துவமுடையதாக இருப்பதை அவதானிக்க முடிந்தது. காரைநகர் மணிவாசகர் சபையால் வருடாவருடம் நடாத்தப்படும் மணிவாசகர் விழாவில் அண்மையில் இவரது பேச்சைக் கேட்டு இன்புற்று மகிழ்ந்தவர் பலர். இவரது சேவையால் இவர் பெற்ற பட்டங்கள் கௌரவமடைகின்றன என்று கூறுதல் மிகையாகாது.

**இவரது கௌரவ பட்டங்கள்**

**செஞ்சொற்செல்வர் :** திருக்கேதீச்சரம் – திருவாசகமடம், சிவனடியார் திருக்கூட்டம் – 1974

**திருமுறைச்செல்வர் :** நீர்கொழும்பு இந்துமகாசபை – 1974

**பிரசங்க பூஷணம் :** வண்ணை வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தானம் – 1974

**சிவத்தமிழ்ச்செல்வர் :** திருவாவடுதுறை ஆதீனம், தமிழ்நாடு, மயிலாடுதுறை. சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை விழாவில் – 2007

மேலும் பௌராணிகரர் (புராணபடனம்) விளங்குமிவர் கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் ஆகியவற்றைத் தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகராலயத்தில் ஆற்றி வருகின்றார்.

சொற்பொழிவோடு மட்டும் நில்லாமல் எழுத்துத் துறையிலும் தம்மை ஈடுபடுத்தி வருகின்றார். (சமயஞ்சார்ந்த கட்டுரைகள், பல்திறப்பட்ட விமர்சனங்கள், சுவைமிகு நயப்புரைகள் என்பன சஞ்சிகைகள், மலர்களில் வெளிவந்துள்ளதைக் கண்டின்புறக்கூடியதாகவுள்ளமை இவரது சிறப்புக்கு ஆதாரங்களாகின்றன.



# நாகலிங்கம் குழந்தைவேலு (குழந்தை)

## (1944)

| | | |
|---|---|---|
| பெயர் | : | நாகலிங்கம் குழந்தைவேலு (குழந்தை) |
| முகவரி | : | முதலாம் வட்டாரம், வேலணை கிழக்கு (சாட்டி எனும் ஊர்) |
| பெற்றோர் | : | நாகலிங்கம் தங்கமுத்து |
| பி.திகதி | : | 08.07.1944 |
| பட்டம் | : | B.A, M.A சிறப்பு – தமிழ் |
| பணி | : | செங்குந்தா இந்துக் கல்லூரி ஆசிரியர், 1991இல் தமிழ்ப் பேராசான் எனும் பெயர் மிளிரத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. |
| வகித்த பதவிகள் | : | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநலசேவைகள் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர், கமநல சேவை திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தராக அதி சிறப்புத் தரத்துக்கு உதவி உயர்வு பெற்றமை, வடகிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர், யாழ் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள தலைமைப்பீட பெரும்பாக உத்தியோகத்தர். |
| இளைப்பாறல் | : | 2004–08–07 |
| கௌரவப்பட்டம் | : | விவசாய சேவையாளன் / தமிழ்ப்பேராசான் |

தமிழ்த்துறையில் பரந்த அறிவு, கேட்போர் சிந்திக்க, இனிக்கப் பேசக்கூடிய குரல்வளம், மாணவர்களது ஆர்வம் குன்றாதிருக்க உயர்ந்த நகைச்சுவையுணர்வு என்பன இவருக்குக் கிடைத்த அரும்பெரும்கொடை எனலாம்.



# பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் (1945)

பொன்னாலைப் பிள்ளையார் கோவில் அர்ச்சகரான சிவத்திரு பொன். தியாகராசா தந்தையார், தாயார் காமாட்சியம்மை. ஆரம்பக் கல்வியை பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையிற் பெற்று ஆண்டு 7 சித்தியெய்திய பின் வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும், பின் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் கற்று, க.பொ.த பரீட்சையில் சித்தியெய்தினார். ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில் பண்டிதர் செ.துரைசிங்கம் முதலானோர் நடத்திய பிரவேச பண்டித, பாலபண்டித வகுப்புகளில் வரன்முறையாகக் கற்று 1969இல் பண்டிதரானார்.

செட்டி குறிச்சி உரையாசிரியர் கார்த்திகேசுவிடம் புராணபடனப் பயிற்சி பெற்றார். தமிழ் நாட்டிலிருந்து அவ்வப்போது வந்து சித்தாந்த வகுப்புக்களை நடாத்திய வச்சிரவேலு முதலியார், தொண்டை மண்டல ஆதீனம் தற்புருஷ தேசிகர் என்போரது வகுப்புகளிலும் தருமையாதீனத்தில் 1985இல் ஆதிமுருகவேள் நடாத்திய சிவஞானபோத வகுப்பிலும் பங்கு பற்றியவர்.

நல்லூர் கணபதீசுவர குருகுலத்திற் கற்றுச் சம்ஸ்கிருத பிரவேச பண்டித பரீட்சையிற் சித்தியெய்தியபின் அந்தக் குருகுலத்திற் சில ஆண்டுகள் கற்பித்தார். ஈழநாடு பத்திரிகையில் 1982ஆம் ஆண்டிலிருந்து சில வருடங்கள் உதவியாசிரியராயும், பின் முரசொலிப் பத்திரிகையில் ஒப்புநோக்குநராகவும் கடமை செய்தார்.

**பண்டிதர் அவர்கள்**

- கமலை ஞானப்பிரகாசர் இயற்றிய புட்பவிதி என்னும் செய்யுள் நூலுக்குப் பொழிப்புரை எழுதினார்.
- "சைவசமயத்தின் சிறப்புக்கள்" என்ற சிறுநூல் எழுதினார்.
- சனீஸ்வரன் என்னும் நூல் பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வெளியீடாக முதலில் வந்தது.
- பொன்னாலை அரங்கநாதர் குடமுழுக்கு விழா மலரைத் தொகுத்து வெளியிட உதவி புரிந்தார்.
- "அருளாளன்" என்ற புனைபெயரில் ஈழநாடு பத்திரிகையில் வெள்ளிச் சிந்தனை எழுதினார். அதனை ஈழநாடு நிறுவனம் பாராட்டி, திருக்கேதீச்சரத்துக்குச் சிறப்பு நிருபராக அனுப்பி, கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடச் செய்தது.
- இப்பொழுது காசி காண்டத்துக்குப் பொழிப்புரை எழுதிக் கொண்டிருக்கிறார்.

இவராற்றிய சைவ, தமிழ், சமூக சேவைகளைப் பாராட்டிக் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் மணிவிழாக்குழு கௌரவிக்கிறது.



# பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன் (1947)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரின் தந்தையார் மயில்வாகனம் நவரத்தினம் ஆசிரியர். தாயார் பாக்கியம். இவர் வட்டு. திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், வட்டு இந்துக் கல்லூரி என்னும் பாடசாலைகளிற் கற்று சி.பா. த. (ஆங்கிலம்) விஞ்ஞானப் பரீட்சையிற் சித்தியடைந்தார். பண்டிதர் செ.துரைசிங்கம், அரியாலையூர் பண்டிதர் இலக்கணக்கொத்து க.இராசையா, வியாகரண சிரோன்மணி சீதாராம சாஸ்திரிகள், வித்துவான் ந.சுப்பையாபிள்ளை, சரவணை (வேலணை) வித்துவான் க.பொன்னையா பண்டிதர், புலவர்மணி சோ.இளமுருகனார் இவர்கள் கூட்டாக, வித்துவான் வேலன் நாவலர் மகாவித்தியாசாலை அதிபராயிருந்த காலத்தில் நாவலர் காவிய பாடசாலையில் வகுப்புக்களையும் கருத்தரங்குகளையும் நடத்தினர். இவர்கள் என்னை அரவணைத்தனர், ஆசி கூறினர்; வாழும்வரை என்னுடன் உறவு பாராட்டினர். இவர்களெல்லாம் பண்டித கல்வியைப் பெறத் துணையாயிருந்தனர். யாழ். ஆ.தி.பா. சங்கத்தின் பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்கான கல்வியை மட்டுவில் பண்டிதர் ச. பொன்னுத்துரை அவர்களிடம் குருகுல முறையிற் கற்றார். பண்டித பட்டத்தின் பின்னர் இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர், ஏழாலை பண்டிதர் மு. கந்தையா, பண்டிதர் அ. ஆறுமுகம், பண்டிதர் உமாமகேஸ்வரன், கலாநிதி வித்துவான் க.ந. வேலன் போன்ற சான்றோர் சேர்க்கை சந்தேக நிவர்த்திக்கும் கல்வி வளர்ச்சிக்கும் பல்வேறுவிதமான ஆளுமைக்கும் உதவுவதாயிற்று.

1947-12-10இல் பிறந்த இவர் சிந்துபுரம் வட்டுக்கோட்டையில் வசித்து வருகின்றார். மரபுவழித் தமிழ்க் கல்வியும் நவீன கல்வியும்

இயைந்துருவான ஆளுமையின் அடையாளமாக விளங்கும் இவர், ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியரும் ஆவார். தொழில் நிலையில் ஆசிரியர், விரிவுரையாளர், நூலகர், தொழிநுட்பவியலாளர், பத்திரிகையாளர் எனப் பல பரிமாணங்களைப் பெற்றுள்ள இவர், எழுத்துத் துறையில் "மூலவேர், பொற்கலசம், தீந்தேன்" முதலான நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

இவற்றைவிடப் பல நாடகங்ளை எழுதி மேடையேற்றியதுடன் மேலைத்தேய நாடகங்களினையும் ஆற்றுகைக் குழுவின் தலைவராக இருந்து மேடையேற்றியுள்ளார். இவருக்குப் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக்கான பரிசும் கிடைத்துள்ளது. இவர் எழுதிய நாடக நூல் 'பொறுப்பனோ யான்' என்பதாகும்.

'கலாபூஷணம், கலைவாரிதி' முதலான பட்டங்களும், வடமாகாண சிறந்த நூற்பரிசு, இலங்கை இலக்கிய பேரவையின் நூற்பரிசு முதலானவையும் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், இவருடைய 40 வருடங்களுக்கு மேலான கலைச் சேவையைப் பாராட்டி வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 2012ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருதும் வழங்கியுள்ளது.

இலங்கைத் தொழில் நிறுவனத்தின் (I.L.O) உதவியின் கீழ் நடத்தப்பெற்ற பயிற்சி நெறியில் பங்குபற்றி, தொழில்நுட்பக் கல்லூரியால் நடத்தப்பெற்ற கைத்தொழிற் பேட்டையில் வேலை செய்ய வாய்ப்புக் கிடைத்தது. சிறிது காலத்தின் பின் வட்டுக்கோட்டைக்கு வந்து சீநோர் வலைத் தொழிற்சாலையில் தொழில்நுட்ப மேற்பார்வையாளராக 8 ஆண்டுகள் வேலை செய்தார். சொந்தத்தில் தாம் தொழில் நடத்துவதனால் பலருக்கு வேலை வழங்கவும், கூடுதலான வருமானம் பெறவும் வாய்ப்பிருக்குமென்றெண்ணி "மாயன்" தொழிற்சாலையை நிறுவி, மின்னிணைப்பு, மின் ஒட்டு திருத்துதல் வேலைகளை நடத்தி வந்தார். இந்தப் பத்து ஆண்டுகாலப் பகுதியின் இடையில் நூலகத்துறைக் கல்வியைப்

பயின்று நூலக விஞ்ஞான இடைத்தரவியற் பரீட்சையில் (Inter Library Science) சித்தியடைந்து வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம் பகுதிகளிலுள்ள நூலகங்களில் வேலை செய்தாராயினும், தமது பண்டிதக்கல்வியைப் பயன்படுத்தவோ, வளர்க்கவோ அவை துணை செய்யாதெனக் கண்டு 1991 தொடக்கம் யாழ் புனித பத்திரியார் கல்லூரித் தமிழாசிரியர் சேவையினை ஏற்றுப் பணி செய்து வந்த காலத்தில் மதுரைக் காமராசர் பல்கலைக்கழக முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றார். தற்போது பணிநிலை ஓய்வுபெற்று, சிறிது காலம் தினக்குரல் (கோலமஞ்சரி) ஆசிரியராகப் பணியேற்றுப் பத்திரிகையாளனாகவும் பணிபுரிந்தார். இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் வருகைதரு விரிவுரையாளராகப் பணிபுரிந்து வருகிறார். கல்லூரி ஆசிரியப் பணியை ஏற்க முன் இவர் 1970 – 1990 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் பத்திரிகையாளராயும் கடமையாற்றியுள்ளார். இக்கால கட்டத்தில் ஈழநாடு, உதயன், முரசொலி இதழ்களில் இவரின் கட்டுரைகளும், கவிதைகளும் தினகரன், வீரகேசரி இதழ்களில் விமரிசனங்களும் வெளிவந்தன. அதனால் புலவர் ம.பார்வதிநாதசிவத்தின் உறவும் அமைந்தது. அவற்றுள் 13 உப பகுதிகளைக் கொண்ட கட்டுரைகளைத் தெரிந்தெடுத்து "மூலவேர்" என்னும் பெயரில் நூலாக 1993-12-27இல் வட்டுக்கோட்டைத் தொகுதிச் தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ளது. தற்போது பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பண்டித மாணவர்களுக்கும் பாடம் கற்பித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது தமிழ்ப்பணி, கலைப்பணிகளைகளைப் பாராட்டி கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் மணிவிழாக்குழு இவரை நீடு வாழப் பிரார்த்தித்து விருது வழங்கிக் கௌரவிக்கிறது.

*– கலாநிதி நாகேஸ்வரன் எழுதியது*



# பேராசிரியர் கலாநிதி நா.வி.மு. நவரெத்தினம் (1950)

யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் ஏறக்குறைய 90 வீதமான இசைத்துறைப் பாண்டித்தியமுள்ள தலைசிறந்த மாணவர்களையும், விரிவுரையாளர்களையும், கலைஞர்களையும் உருவாக்கிய பேராசான் பேராசிரியர், கலாநிதி நாகநாதபிள்ளை விநாசித்தம்பி முருகேசு நவரெத்தினம் 27.06.1950 ஆம் ஆண்டு ஆனிப் பூரணையன்று நயினாதீவில் பிறந்தார். தாயாரின் பெயர் சிவக்கொழுந்து. இவர் தமது ஆரம்பக் கல்வியை ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் பயின்றார். இடைநிலைக் கல்வியை நயினாதீவு ஆங்கில மகாவித்தியாலயத்திற் பயின்றார். இங்கு SSC பரீட்சையில் சித்தியெய்தினார். 1971 முதல் 1974 வரை திருப்பனந்தாள் ஆதீனக் கலைக் கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத்துறையிலும் பயின்றார். 1974இல் அகில இந்திய வானொலி நிலையக் கலைஞராகி இசைக் கச்சேரிகளை நிகழ்த்தினார். பிரபலஸ்தர்கள் – மேதைகள் பலருடன் இணைந்து சங்கீதக் கச்சேரியில் பாடியுள்ளார். 1975ஆம் ஆண்டு பண்ணிசையில் டிப்ளோமா பட்டம் பெற்றார். அண்ணாமலையில் 1974 முதல் 1978 வரை இசை கற்றார். 1978இல் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்திலே இசையாசிரியரானார். 1981 – 1983 வரை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்று டிப்ளோமா பட்டம் பெற்றார். 1984ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக இசைத்துறையிலே இசை விரிவுரையாளராகப் பதவியேற்றார். 1993 – 1996 ஆம் ஆண்டில் இசைத்துறையில் முதலாவது முதுகலைமாணி M.Phil பட்டம் பெற்றார். 2004 – 2006ஆம் ஆண்டுகளில் இந்திய தமிழ்நாடு தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் பயின்று சங்கீத கலாநிதிப் பட்டம் பெற்றார். தெலுங்கு, ஆங்கில மொழிகளில் உயர் டிப்ளோமா பட்டம் பெற்றார்.

1996ம் ஆண்டு சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் IIஇல் பதவியுயர்வு பெற்றார். 1975 இல் யாழ். பல்கலைக்கழக மட்டத்தில் இசைத்துறை தொடங்கப்பட்டது. 2002இல் முதுநிலை விரிவுரையாளர், தரம் I பெற்றார். 1992இல் பண்ணிசைக்கான பட்டப்படிப்புத்துறை ஆரம்பிக்கப்பட்டது. 1998 – 99ஆம் ஆண்டுகளில் பதில் தலைவராயும், பின் 2004 வரை தலைவராகவும், 2009 – 2010 வரை பதில் தலைவராயும், 2010 முதல் தலைவராயும் பணிபுரிந்து வருகிறார். 19.08.2012 முதல் இந்தியாவில் தஞ்சைத் திருவையாறு தமிழ் இலக்கிய பன்னாட்டு ஆய்வு நிறுவன ஔவைக் கோட்டத்தின் தமிழிலக்கியம் மற்றும் இசை ஆராய்ச்சி பன்னாட்டு மகாநாட்டு இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் – தமிழிலக்கிய ஆய்வுக்கழகப் பேராசிரியர் நியமனம் பெற்றார். இவர் 300க்கு மேற்பட்ட நுண்கலைமாணிச் சிறப்புப்பட்ட ஆய்வு மேற்பார்வையாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

தத்துவம் / ஆற்றுகையெனும் இரு துறைகளிலும் ஞானம் கொண்டவர் இவ்வாசான். இவருக்கு ஏறக்குறைய முப்பத்தேழுக்கும் அதிகமான சிறப்பு விருதுகள் பல்வேறு நிறுவனங்களாலும், ஆதீனங்களாலும், சைவாலயங்களாலும், சபாக்களாலும் வழங்கப்பட்டுள்ளன. கௌரவப் பட்டங்களும் இசைத்தமிழ் வேந்தர், ஞானசிரோமணி, சாகித்திய இசைப் பேரரசு, கலாபூஷணம், சாகித்திய இசைச் சக்கரவர்த்தி, தமிழிசை அரசு, அருளிசைஞான வள்ளல், தமிழிசைமாமணி என்பன சிறப்பானவை.

பிரபலமிக்க இசைமேதைகள் – கர்நாடக சங்கீத வித்துவான்களிடம் இவர் கர்நாடக சங்கீத ஞானத்தைக் கற்கும் பேறு பெற்றார். அகில உலக இசைச் சக்கரவர்த்தி மதுரை எஸ். சோமசுந்தரம் (மதுரை சோமு), திருப்பாம்புரம் சிவசுப்பிரமணியபிள்ளை, மயிலம் வச்சிரவேல் முதலியார், வாசு கோமதி ஷங்கரையர், திருச்சி வேணுகோபாலையர், திருவளப்புத்தூர் கிருஷ்ணமூர்த்திபிள்ளை. திருவிடை மருதூர் வீரசாமிப்பிள்ளை, சிதம்பரம் ராதாகிருஷ்ணபிள்ளை ஆகிய

வித்துவான்களிடம் கர்நாடக இசையை வரன்முறையாகப் பயின்றார். தேவாரத் திருமுறைப் பண்ணிசையினை திருப்பனந்தாள் ஆதீனத் திருமுறைப் பேராசிரியர்கள் திருநாரையூர் ஆ.சுப்பிரமணிய முதலியார், சிதம்பரம் கனகசபைப்பிள்ளை, திருவாவடுதுறை சோமசுந்தரதேசிகர், திருச்சி சுப்பிரமணிய தேசிகர், மயிலாடுதுறை சாமி ஐயா தேசிகர் போன்றவர்களிடம் கற்றார்.

தருமபுரம் சுவாமிநாதன், சீர்காழி திருஞானசம்பந்தன், திருத்தணி சுவாமிநாதன், அடங்கமுறை இரத்தினசபாபதி தேசிகர், மதுரை சோமசுந்தரம் (மதுரை சோமு), T.N. சிவசுப்பிரமணியபிள்ளை ஆகியோருடன் இணைந்து கச்சேரி செய்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் Super grade கலைஞராயும் உள்ளார். தமிழ்நாடு திருவையாறு சங்கீத நிறுவனங்களது ஏற்பாட்டிலும் இசையரங்குகளை நிகழ்த்தியுள்ளார்.

பிரபலமிக்க வயலின், மிருதங்கக் கலைஞர்களுடன் இணைந்து இசைக் கச்சேரிகளை நடத்தியுள்ளார், இன்றும் நடத்தி வருகிறார். வயலின் வித்துவான்களான இராமநாதபுரம் M.N. கணேசபிள்ளை, குடந்தை சாரங்கபாணி, குடந்தை அண்ணாத்துரை, கேரள இசைக்கலைஞர் ஜோக் குருவில்லா, திருவளப்புத்தூர் கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை, ஆ.சிவராசா, V.K. குமாரசாமி, இணுவில் இராதாகிருஷ்ணன், P.S. பிச்சையப்பா, பாக்கியராசா, விநாயகமூர்த்தி, ப.சண்முகானந்தம், உடுவில் சுப்பிரமணியக்குருக்கள், வெங்கடேஸ்வர சர்மா, ஜெயராமன், சோமாஸ்கந்த சர்மா, பத்மநாதன் ஆகியோர் இவரது இசைக் கச்சேரிகளில் வயலின் வாசித்துள்ளனர்.

மிருதங்க வித்துவான்கள் A.S. இராமநாதன், அம்பலவாணர், இரத்தினம், கணேச சர்மா, எஸ். மகேந்திரன், பிரம்மநாயகம், S. பாக்கியநாதன், பாலச்சந்திரசர்மா, K.K. அச்சுதன், S. சிதம்பரநாதன், பாலகிருஷ்ணன், வரதராசர்மா, பிரணவநாதன், ரகுநாதன், ரமணன், கணேசபிள்ளை,

கண்ணதாசன் ஆகியோர் மிருதங்கம் வாசித்துள்ளனர். கணேசபிள்ளை கெஞ்சிரா வாத்தியமும் வாசித்துள்ளார்.

K.K.அச்சுதன், செல்வரத்தினம், பி. பிச்சையப்பா ஆகியோர் கடம் வாசித்துள்ளனர். P.S. ஆறுமுகம்பிள்ளை, P.S. பிச்சையப்பா ஆகியோர் முகவீணை வாசித்துள்ளனர். ராசா, ஜேம்ஸ், சதீஸ், நந்தகுமார், செந்தூரன் ஆகியோர் முகர்சிங் வாத்தியக் கலைஞர்களாக இருந்துள்ளனர். மேலைத்தேச இசையியல், மிடற்றிலக்கணம், தமிழிசைக்களஞ்சியம் என்னும் இசையாய்வு நூல்களை வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே நுண்கலைமாணிப் பட்டத்திற்கும், பண்ணிசைக்கான பட்டப்படிப்புக்குரிய பாடத்திட்ட உருவாக்கத்தில் பங்கேற்றுக் கொண்டார். இசைப் போட்டிகளுக்கான நடுவராகவும் பணிபுரியும் இவர், உள்வாரி, வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கான பரீட்சகராகவும் உள்ளார். மட்டக்களப்பிலுள்ள சுவாமி விபுலாநந்த இசைத்துறைப் பிரதம பரீட்சகராகவும் உள்ளார்.

வட இலங்கை சங்கீதசபை (NCOMS) யுடன் நீண்ட காலம் தொடர்புடையவர். 1981ஆம் ஆண்டுகளில் நிர்வாக உறுப்பினர், பதிற் செயலாளர், பரீட்சைச் செயலாளர், பண்ணிசைக் கல்வித்திட்ட இணைப்பாளர் எனப் பணிபுரிந்துள்ளார். இவரிடம் இசை — பண்ணிசை ஆகியனவற்றைப் பயின்று கடல் கடந்த பிற நாடுகளிலும், அகில இலங்கை ரீதியிலும் தகைமை பெற்றுள்ள இசை — பண்ணிசை ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் பணிபுரிகின்றனர் என்பது இவரது போதனைக்கான சிறப்புகளாகும். சமகாலத்திலே பரதத்தில் பட்டப்படிப்பையும் (Dance graduation) முன்னெடுத்து வளர்த்து வருகின்றமை குறித்தற்பாலது.



# வைத்திய கலாநிதி சோமசேகரம் சபாநாதன் (1951)

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட சோமசேகரம் சபாநாதன் அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியா லயத்தில் தொடர்ந்து இடைநிலைக் கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும், உயர் கல்வியை சுதேச மருத்துவ நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகத்திலும் கற்று D.I.M.S, M.AcF, DFP பட்டங்களைப் பெற்றவர்.

தனியார் வைத்திய நிலையம் கைதடியில் 1981இல் இருந்து 1996ஆம் ஆண்டு வரை தமது வைத்தியத்தொழிலை ஆற்றினார். துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் காலத்திலிருந்து துரைராசா காலம்வரைபகுதிநேர விரிவுரையாளராகக் கடமை செய்தார்.

இவர் சாக்கோ மெடிக்கல் சென்ரரில் நிபுணர்கள் ஆலோசனை ஆய்வுகூடம், யாழ் டேடன்ஸ் மருத்துவ ஆய்வுகூடம் என்பவற்றின் உரிமையாளராகவும், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கில் தனியார் வைத்தியநிலையமும் வைத்துப் பணியாற்றி வருகின்றார்.

## இவரது விசேட தகைமைகள்

தலைவர் – சுதேச மருத்துவ அபிவிருத்திச் சங்கம், இலங்கை.

விளையாட்டுத் துறையிலும் ஈடுபாடு மிக்கவராவார்.

கிரிக்கெட், காற்பந்து, விளையாட்டு வீரராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியில் இருந்தவர். இவரது மனைவியார் பிரேமலதா ஒரு விஞ்ஞான ஆசிரியராவார். மகன் ரஜீவ் M.B.B.S டாக்டர் ஆவார்.

மருமகள் C.I.M.A பட்டம் பெற்றவர். மருகர் இராகுலன் சிங்கப்பூரில் பொறியியலாளராகக் கடமை செய்கின்றார். இவர் போல் இவரது பிள்ளைகளும் படித்து நல்லநிலையில் உள்ளனர். சமூக நலனில் அக்கறையோடு பெரும் பாடுபட்டு உழைக்கின்றார்.



# வீரவாகு கணேசராஜா
## (1954)

1. Full Name : Mr. Veeravagu Ganesharajah
2. D.O.B : 1954.08.07
3. Address : 55/44, College Road, Neeraviyady, Jaffna.
4. Nationality : Sri Lankan Tamil.
5. Sex : Male
6. NIC No. : 542202548 V
7. Educational, Professional Qualifications :
   B.Com (University of Peradenia)
   Post Graduate Dip-in-Ed. (University of Jaffna), M.Ed (University of Jaffna, SLPS I, SLEAS III.
8. Service Record

| | | |
|---|---|---|
| 1) | Mn/St. Zavier's Boys M.M.V - Teacher | 01-09-1981 – 31-05-1989 |
| 2) | Mn / Periyamadu M.V, Principal Grade I | 01-06-1989 – 01-10-1991 |
| 3) | J/Annacoddai R.C.T.M.S, Principal Grade I | 01-10-1991 – 17-02-1992 |
| 4) | J/Athiyar Hindu College, Cluster Principal | 18-02-1992 – 31-12-1995 |
| 5) | V/Vavuniya Tamil M.M.V, Principal | 01-01-1996 – 28-06-1998 |
| 6) | Divisional Education Office, Director | 29-06-1998 – 31-12-2000 |
| 7) | Divisional Education Office, Director | 01-01-2001 – 20-11-2005 |
| 8) | Jaffna Hindu College, Principal | 21-11-2005 – upto now |

இவ்வாறான கல்லூரிகளில் அதிபராய் இருந்து கல்விக்காய் உழைப்பதுடன், நாடு சார்ந்த சமூகப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தி வருகின்றார். இளமை மிடுக்குடன் எவரையும் வசீகரிக்கும் நல்லுளம் கொண்ட இவர், மாணவர் நலனில் மிகுந்த அக்கறை காட்டி வருவதும் உபசரிப்பதுவும் குறிப்பிடத்தக்கது.



# இமெல்டா சுகுமார்

இவர் இந்தியா, ஜேர்மனி, இத்தாலி, இந்தோனேசியா, சீனா, பிலிப்பைன்ஸ், ஜெனீவா, யப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வறுமை ஒழிப்பு, பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பு, அனர்த்த முகாமைத்துவம், உணக உணவுத்திட்டம், மனித உரிமைகள், சமூக சேவைகள் போன்ற விடயங்ள் தொடர்பாக நடைபெற்ற மாநாடுகள், பயிற்சிப்பட்டறைகளில் கலந்து கொண்டுள்ளார்.

**சேவைகள் :**

**முதல் நியமனம் – 1984ம் ஆண்டு**

- உதவி அரசாங்க அதிபர், செட்டிக்குளம், வவுனியா.
- உதவி அரசாங்க அதிபர், தலைமைப்பீடம், கச்சேரி, வவுனியா.
- பொது நிர்வாக அமைச்சின் ஒருங்கிணைப்பு ஆலோசகர், வவுனியா மாவட்டம்.
- பிரதேச செயலாளர், செட்டிக்குளம், வவுனியா, விசேட ஆணையாளர், பிரதேச சபை, செட்டிக்குளம், வவுனியா.
- பிரதேச செயலாளர், வவுனியா நகரம், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், நகர சபை, வவுனியா.
- அரசாங்க அதிபர், முல்லைத்தீவு (08 ஆண்டுகள்)
- அரசாங்க அதிபர், முல்லைத்தீவும், பதில் அரச அதிபர் கிளிநொச்சியும்
- அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் (02 ஆண்டுகள்)
- ஜனாதிபதியின் மேலதிக செயலாளர்
- செயலாளர், சமூக சேவைகள் அமைச்சு.

**விசேட தகைமை**

- இலங்கையின் முதலாவது தமிழ்ப்பெண் அரச அதிபர்
- 2012ம் ஆண்டுக்கான சிறந்த திறமையை வெளிக்காட்டிய பெண் நிர்வாகிக்கான விருது சர்வதேச மகளிர் தினத்தில் அதிமேதகு ஜனாதிபதி, முதற்பெண்மணி ஆகியோரால் வழங்கப்பட்டது.



# அருள்நங்கை சண்முகநாதன் (1957)

| | | |
|---|---|---|
| பெயர் | : | அருள்நங்கை சண்முகநாதன் |
| முகவரி | : | சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை |
| பிறந்த திகதி | : | 31.07.1957 |
| பட்டம் | : | B.A. கொழும்பு<br>M.Phill காமராஜர் பல்கலைக்கழகம் |
| விரிவுரையாளர் | : | முன்னைநாள் களனிப் பல்கலைக்கழகம்<br>தற்போது புதிய உயர் கல்லூரி<br>(யாழ், பேராதனை, காமராசர் பல்கலைக்கழகம் – வெளிவாரி)<br>B.A. மற்றும் M.A பட்டப்படிப்புகள் இடம்பெறுகிறது. 25 வருடங்களுக்கு மேற்பட்ட சேவையுடன், இப்பட்டப் படிப்புகள் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது. |

**சேவைகள் :**

- பார்வையற்றோருக்கு பணம் வழங்கல்
- பின்தங்கிய பாடசாலை மாணவர்களிற்குத் தேவையான எழுதுகருவி, காகிதாதிகள் (அப்பியாச புத்தகம்) வழங்கல்.
- மகன் சந்துதனின் ஞாபகார்த்தமாக கரையாம்பிட்டி காக்கைதீவு மயானம் 25,00,000 ரூபா (இருபத்தைந்து லட்சம்) வுக்கு மேல் செலவு செய்து புனரமைத்தமை.
- கைதடி சிறுவர் இல்லத்துக்கு அன்பளிப்புகள் வழங்கியமை.



# கணபதிப்பிள்ளை இராஜரெத்தினம்
# (1961)

அம்பாறை மாவட்டம் தம்பிலுவில் 1961-10-03இல் இவர் குருகுல ஆதீனத்தில் 1978இல் முழுநேரத் தொண்டனாக இயங்கி வந்தவர். தொண்டராசிரியராக 1982இல் பணிபுரிந்தார். அரச பணியில் 1988இல் தமது சேவையை ஆரம்பித்து கிராம சேவகர்களுக்கான நிருவாகப் பதவிநிலை அலுவலராகக் கடமைபுரிந்தவர்.

இவர் சமூக வாழ்விலே தம்மை முழுமையாக அப்பணித்து வருபவர். இறைபணிச்செம்மல் என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவர். தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் பணிப்பாளராக இருந்து நெறிப்படுத்தி வருகின்றார்.

**பொறுப்புக்கள்**

- இந்து சமய, கலாசார, ஆன்மீக, சமூக, கல்வி மேம்பாட்டுக்கான திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர்.
- திக்கற்ற, கைவிடப்பட்ட அநாதைகளான குழந்தைகளை சமய நெறியோடு இணைந்த வாழ்க்கையுடனும் வாழவைக்கும் குருகுல சிறுவரில்லத்தின் முகாமையாளர்.
- அம்பாறை மாவட்ட சர்வமத சபையின் செயலாளர்.
- மதங்களுக்கிடையேயான நல்லிணக்க அமைப்பின் ஸ்தாபகர்.
- அகில இலங்கை இந்துமா மன்ற முகாமை உறுப்பினர்.
- இலங்கை இந்துப் பேரவையின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர்.
- இந்து ஸயம் சேவ (HSS) அமைப்பின் தீவிர பணியாளர்.
- ஆலயங்களின் ஒன்றியத்தின் துணைத்தலைவர்.
- பல ஆலயங்களின் ஆலோசகர்.

- இந்துசமயத்துக்கான இளைஞர் எழுச்சி அணியின் ஸ்தாபகரும் பயிற்றுவிப்பாளரும்
- குருகுல "இந்து சமய உபநியாசம்" பிரிவின் பேச்சாளர்.
- உகந்தை மலைமுருகன் ஆலய அன்னதான சபையின் தலைவர்.

**ஆற்றுகின்ற பணிகள்**

- இந்துசமய, கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்தல்.
- சமய குரவர்கள் குருபூஜையை நடத்துதல், அதனூடாக ஆன்மீகக் கருத்துக்களையும், இறைவாழ்வு பற்றிய நோக்குக்காக பணியாற்றல்.
- குழந்தைகளைப் பராமரித்தல்.
- 1978-01-06 ஸ்தாபிக்கப்பட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தினூடாக அனைத்துப் பணிகளையும் நெறிப்படுத்தல்.
- ஆறநெறிக் கல்விக்கான பணிகள் மேற்கொள்ள 28 அறநெறிப் பாடசாலைகளை திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தினூடாக நெறிப்படுத்தல்.
- சமய, சமூக, கலாசார பணிகளில் தன்னை ஈடுபடுத்தி பல கலாசார பண்பாட்டு விழுமிய விழாக்களை நடத்தியமை.
- ஆலய வரலாற்றுப் படிமங்களை வெளிக்கொணர வரலாற்று ஆய்வாளர்களை அழைத்துள்ளமை.
- ஆன்மீக எழுச்சிக்காக பல தடவை இந்தியா சென்று செயலமர்வு, மகாநாடுகளில் கலந்து சிறப்பித்தவர்.
- யாழ் தந்த சிவயோக சுவாமிகளின் சீடரான ஹவாய் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் ஓர் தீவிர பக்தர்.
- நல்லை அதீன சுவாமி, இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள், தந்திரதேவா சுவாமிகள், முருகேசு சுவாமிகள், மொயல் சுவாமி நித்தியானந்தா, குருதேவர் சிவாயசுப்பிரமுனிய சுவாமி, போதிநாத வேலன் சுவாமிகள், திருமுருக கிருபானந்தவாரியார், அமிர்தாயிமாயிய், சின்மயா மிசன் சுவாமி போன்றவர்களது அருளாசியைப் பெற்றவர்.
- இந்து சமயத்துக்கான மேம்பாட்டிற்குத் தன்னை ஈடுபடுத்தியதுடன் நாவலர் காட்டிய நன்னெறியில் தனது வாழ்வினை சமயத்துடன் இணைத்து நடத்தும் ஓர் அன்பர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தம் துறைசார் வளர்ச்சியில் நிற்பதோடமையாது சமூக சேவை, தொண்டு செய்தல் ஆதியாம் பணிகளில் தம்மை ஈடுபடுத்தி வருகின்ற பெரியோர்



## மு. சபாநாதன்

வவுனியாவைச் சேர்ந்த இவர், வவுனியா அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில் பரிபாலனசபையின் தலைவர், அத்துடன் பொதுப் பணிகளிலும் சமயப் பணிகளிலும் அறப்பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.



## டாக்டர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் யாழ் அரசினர் போதனா வைத்தியசாலையின் உதவிப் பணிப்பாளர். யாழ் போதனா வைத்தியசாலையில் புதிய பல வேலைத்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்ற சிறந்த மருத்துவ நிர்வாகியாவார்.

## கிரிஷாந்தி ரவீந்திரா

யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் பரதநாட்டிய விரிவுரையாளராக விளங்கிய இவர், யாழ் உடுவிலைச் சேர்ந்தவராவார். பரதநாட்டியத்தில் தலைசிறந்த வித்தகியாகிய இவர், நடனத்துறையில் பல்வேறு பட்டதாரிகளை உருவாக்கியவர். தற்பொழுது மேற்படிப்புக்கான ஆய்வில் ஈடுபட்டுள்ளார்.

## வைத்திய கலாநிதி நடராசா ஜெயக்குமார்

யாழ். காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வைத்தியத் துறையில் புற்றுநோய் மருத்துவத்தில் நிபுணராக விளங்குகின்றார். சமூக அக்கறையோடு அர்ப்பணிப்புமிக்க சேவையை வழங்கும் இவரை கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு கௌரவிப்பதில் பெருமகிழ்வடைகின்றது.

## க. ஜெயநாயகம்

பதுளையைச் சேர்ந்த இவர், திருப்பணிகள் செய்வதில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்தவர். தொழிற்துறையிலும் சமூக அக்கறையோடு செயற்படுமிவரை கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு கௌரவிக்கின்றது.

நாங்கள் இளைஞரில்

077 3697 568

MANDRAW, THAVADY. T.P. : 0777246477